விலை சதம் 25.

தொலை பேசி: 23411

# தமிழரசு மாநாட்டுக்கு அனுமதி மறுக்கப்படின்

சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, புரட்டாதி 17உ (3-10-71) ஞாயிறு 1391 ஷஃபான் 12 புத்தகம் 25 இதழ் 45

# தடையை மீறித் தலைவர்கள் கைதாவர்!

புதிய அரசியலமைப்பின் கீழ் இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன் தமிழரசுக் கட்சி தனது 12வது மாநில மாநாட்டை நடத்துவது என்று தீர்மானித்திருக்கிறதல்லவா? அவசர காலச் சட்ட விதிகளைப் பிரயோகித்து இம் மாநாடு நடத்துவதற்கு அரசாங்கம் தடை விதிக்குமானால் தடையை மீறி மாநாட்டை நடத்தியே தீருவதென்றும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஏற்றுக்கொள்வதென்றும் தமிழரசுக்கட்சி தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

இலங்கை புதிய அரசியலமைப்பின் கீழ் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர் மாநில மாநாட்டைக் கூட்டி, புதிய அரசியலமைப்பினால், தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களை எடுத்து விளக்குவதென்றும் கட்சியின் அடுத்த நடவடிக்கையை தீர்மானிப்பதென்றும் அவசரகாலச் சட்டம் இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி மாநாட்டை நடத்தியே தீருவதென்றும் திருமலையில் கூடிய தமிழரசுச் செயற் குழு தீர்மானித்துள்ளதல்லவா? இது சம்பந்தமாக தமிழரசுப் பா. உ. ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் பின்வருமாறு விளக்கமளித்தார்:-

'புதிய குடியரசு அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அவசரகால நிலை நீக்கப்பட்டு விடுமென்று நம்புகிறோம். அப்படித்தான் அவசரகால நிலை நீக்கப்படாமலிருந்தாலும் தமிழரசுக்கட்சியின் மாநில மாநாட்டுக்கு அரசு அனுமதி வழங்கும் என்றும் எதிர்பார்க்கிறோம். மாநாட்டுக்கு அனுமதி வழங்க மறுத்து சர்வாதிகார முறையில் அரசு நடந்து கொள்ளுமானால் அத்தடையை மீறி மாநாட்டை நடத்தியே தீருவதென்றும் நாம் உறுதி பூண்டிருக்கிறோம். சனநாயக உரிமையை நிலைநாட்ட நாம் இதைச்செய்தே ஆகவேண்டும். இதன் விளைவாக நாம் கைது செய்யப்படலாம். அதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். தமிழ் மக்கள் எங்கள் பக்கம் இருப்பார்கள் என்ற பரிபூரண நம்பிக்கை எமக்குண்டு'

## சோஷலிசமாம் சோஷலிசம்...!

சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் கோவிலிலிருந்து ஊர்வலமாக அமைச்சர் குமாரசூரியர் சுழிபுரம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளைக் காரியாலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பெருவாரியான மக்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

—ஈழநாடு (20-9-71)

வவுனியாவில் அமரர் நாகநாதன் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வவுனியா மாவட்ட தமிழரசுக்கிளை நடத்தவிருந்த மௌன ஊர்வலத்துக்குப் பொலீசார் அனுமதி அளிக்க மறுத்து விட்டனர்.

—செய்தி

## ஐக்கிய முன்னணி அரசின் தமிழ் ஒழிப்புக்கு உதாரணம் இதோ!

ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தபின் தமிழ் மொழி எவ்வளவு தூரம் அரசாங்க அலுவல்களில் ஒதுக்கப்பட்டு, ஒழிக்கப்பட்டு வருகிறதென்பதை சுதந்திரன் பல தடவைகளில் ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தியிருக்கிறது; இதோ மற்றோர் உதாரணம். மேலேயுள்ள படத்தைப் பாருங்கள்: ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்ததை கொண்டாடும் முகமாக தபாலமைச்சினால் வெளியிடப்பட்ட முதல் நாள் அஞ்சல் உறை (First Day Cover) யில் இடம் பெற்ற சின்னம் தான் இது: இதில் இந்நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி முற்றாக ஒதுக்கப்பட்டிருக்கிறது: தமிழினம் இப்படி அவமதிக்கப்பட்டிருக்கிறது— அதுவும் தமிழரான தபாலமைச்சரின் நிர்வாகத்தில்!




## இவரும் ஒரு தமிழர்!

சிங்களம் மட்டும் கொள்கையை பின்பற்றுவதே காலஞ் சென்ற பண்டாரநாயகாவின் சோசலிச பாதையைப் பின்பற்றுவதாகும்.

—அமைச்சர் பீலிக்ஸ்.

பண்டாரநாயகாவின் சோசலிச பாதையில் நடக்க உறுதி யெடுப்போம்.

பண்டா நினைவு விழாவில் குமாரசூரியர்.

## சிங்களத் திணிப்பு உத்தரவு!

சகல அரசாங்கத் திணைக்களங்களிலும் வைக்கப்பட்டு இருக்கும் கோவைகளில் (files) ஆங்கிலத்தில் குறிப்புகள் எதுவும் எழுதக் கூடாதென்றும், இனிமேல் தனிச் சிங்களத்திலேயே அவற்றை

(4-ம் பக்கம் பார்க்க)

## 46 தமிழ் குடும்பங்களுக்கு அரசு நீதி வழங்குமா?

தமிழர்களின் சொந்தப் பூமியான—வாழையடி வாழையாகத் தமிழர்கள் வாழ்ந்துவரும் தமிழர்களின் கோட்டையாம் திருகோணமலையில் உள்ள ''சாண்டிக்கொ'' என்ற பகுதியில் நாற்பத்தாறு குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் வாழ்ந்து வரும் இந்தக் காணி சம்பந்தமாக ஏற்கனவே வழக்கும் நடந்து அவர்கள் காணிக்கான குற்றப் பணமும் கட்டியதாகத் தெரிய வருகின்றது, ஆனால் இவர்களின் நிலைமை இன்று பரிதாபகரமான நிலைமையில் உள்ளது.

திருகோணமலை அரசாங்க அதிபரால் இவர்களுக்கு 23-5.71ல் அனுப்பப்பட்ட ஒருஉத்தரவில் அவ்விடத்தை விட்டு எழும்புமாறும், வீடுகள் பயிர்கள் யாவற்றையும் அவ்விடத்தைவிட்டு அகற்றுமாறும் கட்டளை இடப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## செல்லத்தம்புவைப் புறக்கணிக்க முயன்றவர்கள் முகத்தில் கரிபூச்சு!

வவுனியாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு அவர்களைப் புறக்கணித்து விட்டு வவுனியாத்தொகுதிக்கு கல்வி உதவியமைச்சர் பி. வை. துடாவையை அழைக்க முயற்சித்தவர்கள் இறுதியில் மூக்கறுபட்டனர். கடைசிநேரத்தில் தமது வருகையை இரத்துசெய்து விட்டதாக திரு. துடாவை வவுனியா பா. உ.வுக்கு தந்தி மூலம் அறிவித்துள்ளார்.

வவுனியா பாராளுமன்ற உறுப்பினரின் எதிர்ப்பைப் புறக்கணித்து— அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் [illegible]

குமாரசூரியர் இறுதியில் முகத்தில் கரி பூசப்பட்டு அங்கிருந்து திரும்பியது வாசகர்கள் அறிந்ததே.

குமார சூரியரை வவுனியாவுக்கு அழைத்த அதே கும்பல்தான் திரு. துடாவையை

(4-ம் பக்கம் பார்க்க)

மில்க்வைற் சோப் பாவிப்பாளருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

மில்க்வைற் தயாரிப்புகளை உங்கள் வாடிக்கை கடைகளில் வாங்கும் பொழுது அவற்றின் மேலுறைகளைக் கவனித்து மேலுறைகளுடனேயே கேட்டு வாங்குங்கள். மேலுறைகளைச் சேகரித்து, மில்க்வைற் வியாபார வான்களில் அல்லது மில்க்வைற் காரியாலயத்தில் அல்லது தபாலில் அனுப்பி பரிசு பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அதிபர்
மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# பண்டாரநாயக்காவும் தமிழரும்

'பண்டாரநாயக்கா ஈழத்தின் தேசியத் தலைவர்; அவர் தமிழருக்கு உரிமை வாழ்வு நல்கினார்; எனவே, அவருக்கு விழா எடுக்கவேண்டும், சிலை நடவேண்டும்' என்று சிங்கள ஏகாதிபத்தியத்தின் தமிழ் வேலைக்காரர்கள் ஊளையிடுகின்றனர். மாட்டின் விக்கிரமசிங்கா போன்ற சிங்களப் புத்திசாலிகள் கூட 'பண்டாரநாயக்கா தமிழரின் நண்பர். அவரது 'சிங்களம் மட்டும்' என்ற சுலோகம் ஆங்கிலத்திற் கெதிரானதே தவிரத் தமிழருக்கெதிரானதல்ல' என்று புது விளக்கம் தரமுன் வந்துள்ளனர். இதன் மூலம் பண்டாரநாயக்காவின் முகத்தைத் திரையிட்டிருக்கும் ஏகாதிபத்திய—வகுப்புவாத — மாசைத்துடைத்து விடலாமெனக் கனவு காண்கின்றனர்.

### நண்பரா பகைவரா?

பண்டாரநாயக்கா தமிழரின் நண்பரா? பகைவரா? இதனை மக்கள் அறிந்திருக்க வேண்டிய அவசியம் முன் எப்போதையும் விட இப்போது அதிகமாக ஏற்பட்டுள்ளது: அவர் சிங்கள இனத்தின் உரிமைகளை வென்றெடுக்க முயன்றாரா? அல்லது தமிழர்களின் உரிமைகளைப் பறித்தெடுக்க விரும்பினாரா? என்பதிலேயே அவரின் இயல்பு தங்கியுள்ளது.

### இரு கூறுகள்

பண்டாரநாயக்காவின் வாழ்க்கையை இருகூறுகளாகப் பிரிக்கலாம். ஒன்று 1952ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரியது; மற்றையது 1952ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதிக்குரியது. முதலாவது காலப் பகுதியில் பண்டாரநாயக்கா தெளிந்த சிந்தனையாளராகவும் இலட்சியவாதியாகவும் தேசியவாதியாகவும் விளங்கினார்: அதற்குப்பின் அவர் குறுகிய நோக்கம் உள்ள பதவி மோகம் மிக்க அரசியல் வாதியாக மாறினார்: முந்திய காலப்பகுதியில் அவரது சுயசிந்தனை அவரை வழிப்படுத்தியது. பிந்திய காலப்பகுதியில் சம்பவங்களும் சந்தர்ப்பவாதிகளும் ஏகாதிபத்திய வெறிபிடித்தோரும் அவரை வழிப்படுத்தினர்: இவ்விருகாலப்பகுதிகளிலும் பண்டாரநாயக்காவின் தமிழர் பற்றிய நோக்கு எவ்வாறு இருந்தது என்பதை வரலாற்று முறைப்படி காண்போம்:

### 1926ம் ஆண்டு வெளியிட்ட கருத்து

1926ஆம் ஆண்டு ஈழத் தமிழரின் வரலாற்றில் சிறப்பிடம் பெறும் ஓர் அறிக்கையை அவர் வெளியிட்டார். 'சிலோன் மோணிங் லீடர்' என்ற ஏட்டில் வெளியான இவ்வுரை ஈழத்திற்குக் கூட்டாட்சி (சமஷ்டி) அரசமைப்பே சிறந்தது என்று கூறுகின்றது.

'சிறுபான்மையோர் ஒருவரையொருவர் நம்பிக்கையின்றி நோக்குகின்றனர். அவர்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் அடிப்படையானவையல்ல என்று எண்ணுவது தவறு. நூறு ஆண்டுகளின் முன் இவ் வேறுபாடுகள் இருந்ததில்லை. வெள்ளையன், தமிழர், கரை நாட்டுச் சிங்களவர் கண்டிச் சிங்களவர் ஆகியோரின் தலை மேற் குந்தியிருந்ததால் இவ் வேறுபாடுகள் தோற்றம் பெறவில்லை. ஆட்சிப் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொள்வது என்ற நிலையேற்பட்டதும் உறங்கிக் கிடந்த இவ்வேறுபாடுகள் வீறு பெற்றெழத் தொடங்கின...... (மொழி, மத, கலாச்சார) வேறுபாடுகள் படிப்படியாக அழியும் என்று நம்ப முயல்பவன் மகா கொடியவனாக இருக்க வேண்டும்......இணைப்பாட்சிக்கெதிராக ஆயிரத்தொரு எதிர்ப்புக்கள் இளம்பலாம். ஆனால், இவை எல்லாம் அடங்கி ஒடுங்கும் போது ஏதாவது ஒரு வகையில் அமையும் இணைப்பரசே ஈழத்தின் பிரச்சினைகள் தீரவழியாக அமையும்'

எனப் பண்டாரநாயக்கா அவ்வறிக்கையிற் குறிப்பிட்டார்: பொதுவாகக் கண்டியர், கரையோரத்தார் ஆகியோருக்கிடையிலான சிக்கல்கள் தீரவும் சிறப்பாகத் தமிழர் தன்மானத்துடன் வாழவும் கூட்டரசே—சுவிற்சர்லாந்துமுறைக்கூட்டரசே—வழி எனப் பண்டா அறுதியிட்டுக் கூறினார்;

### என். எம். சொன்னார் இப்படி!

1926 ஆம் ஆண்டு அவர் கூறியவுண்மையை முப்பது ஆண்டுகள் கழித்து 1955 இல் அவரின் 'ஏகலைவன் சீடன்' ஆகிய சமசமாசக் கட்சித் தலைவர் பின்வருமாறு கூறுவது நோக்கத்தக்கது.

''தமிழை வட, கீழ் மாநிலங்களுக்குரிய மாநில மொழியாக்குவது இந்நாட்டிற் கூட்டாட்சி உருவாகியதைக் குறிக்கும்... வட, கிழக்கு மாநிலங்களில் மட்டும் தமிழை ஆட்சி மொழியாக்கி நாமே அவர்களைப்பிரிந்து போகுமாறு துண்டாவிட்டால் அவர்கள் ஏன் பிரிந்து போகப் போகிறார்கள்? இதற்கே நாம் தமிழரைத்தூண்டுகிறோம். சிங்களம் மட்டும் கொள்கைக்கு வாதிடுவோர் (பண்டார நாயக்கா குழுவினர்) அதனையே செய்கின்றனர். தமிழர்கள் பிரிந்து போனால் அவர்கள் நிலைத்து வாழமுடியாது. அப்போது அவர்கள் இரு வழிகளைக்கையாளலாம். உதாரணமாக, நாம் அவர்களைக் கூட்டாட்சி முறையில் எம்முடன் இணைத்துக் கொண்டு எல்லா வகையிலும் உதவ வேண்டும். இலங்கை கூட்டாட்சி நாடாக வேண்டும்....''

(அரசு அறிக்கை 19-10 1955)

'விலகிப்போனால் விரும்பிச் சேர்ப்போம்' என்ற இத்தத்துவத்தைப் பண்டா ஒப்புக் கொள்ளாமல் முக்காலமும் உணர்ந்த தீர்க்க தரிசியாக விளங்கியதை அவரது 26 ஆம் ஆண்டுப் பேச்சுத் தெளிவாக்குகிறது.

### 1944ல் பண்டா கூறியது

1926 இல் மட்டுமல்ல 1944 இலும் அவர் தமிழரின் நண்பராகவே விளங்கினார். ஜே. ஆர். ஜயவர்த்தன சட்ட சபையில் சிங்களம் மட்டும் பிரேரணையை முன் மொழிந்த போது பண்டா அவரை வன்மையாகக் கண்டித்தது பண்டாவின் தேசிய நோக்கைத் துலக்குவதாகும்.

''சிங்கள மொழி சிறப்பியல்பான இலக்கியச் செல்வம் கொண்டது. அது அதிக வளமும் பன்முகத் தன்மையும் நிறைந்த மொழியாகும். இந்நாட்டின் குறிப்பிடத்தக்க தொகையினர் பேசும் மொழியான தமிழுக்கும் மேற்குறிப்பிட்ட உண்மை பொருந்துவதாகும்... தமிழின் இலக்கியச் செல்வம் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்ததாகும்.... அப்படியிருக்கும் போது சிங்களத்தை மட்டும் [illegible] குறிக்கோள் தான் என்ன? இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளை ஆட்சி மொழிகளாகக்கொண்டு சிறப்பாகச் செயற்படும் பல நாடுகள் உள்ளன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்... தமிழையும் ஓர் ஆட்சி மொழியாக்குவதால் ஏற்படக் கூடிய தீமை எதனையும் என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.... இந்நாட்டில் வாழும் இனங்கள் அனைத்துக்கும் இடையே ஒற்றுமையும் நம்பிக்கையும் ஏற்படுத்தப்படவேண்டும். எனவே, தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளும் ஆட்சிமொழிகளாக்கப் படுவதில் எனக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை. இதனால் தீமையோ ஆபத்தோ ஏற்படுமென நான் எண்ணவில்லை.

(அரசு அறிக்கைதொகுதி 1. நிரல் 810-811-1944)

இது 1944 இல் பண்டாவின் உறுதியான கொள்கை. இங்கு நாம் பண்டாவைத் தமிழரின் நண்பராகக் காண்கிறோம்.

### பெரிய சாதனை

''இரண்டு ஆண்டுகளில் அல்லது பத்து ஆண்டுகளில் சிங்களத்தை மட்டும் நாம் ஆட்சி மொழியாக்கவேண்டும். இலங்கை மாதாவின் நலனை முன்னிட்டு இலங்கையர் அனைவரும் ஒரே மொழியால் இணைக்கப்படவேண்டும்.''

## பொய்ப்பகையார்

எனச் சட்டசபையில் இராசிக் பரீது போன்றோர் வாதிட்டபோது பண்டா சம அந்தஸ்துக்கு வாதிட்டது பெரிய சாதனையேயாகும். பிரேரணையைமுன்மொழிந்த ஜயவர்த்தனவையே திருத்தத்துக்குச் சார்பாகவும் பிரேரணைக்கு எதிராகவும் வாக்களிக்குமாறு செய்த பெருமை அவருக்கு உண்டு.

இது பண்டாரநாயகாவின் ஒரு முகம். அவரது சாந்த முகம். 1950ம் ஆண்டுவரை அவரின் நிலை இவ்வாறே இருந்தது. இதற்குப் பின் அவரின் முகம் 'ரௌத்ர' பாவம் பெற்று அதிலேயே நிலைத்து அழியும் அவல நிலையை வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

### துவேஷ வாந்தி

வெள்ளையர் ஆட்சியிலிருந்து விடுதலைபெற்ற இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்தில் அமைச்சராகும் பேறு பண்டாரநாயகாவுக்குக் கிடைத்தது. ஆனால், அரசறிய வீற்றிருந்த வாழ்வு உட்பகை காரணமாக நின்று நிலைக்க முடியாது போய்விட்டது: அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறினார். அவரது தலைமையில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி உதயமானது. ஐ. தே. கட்சியை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றுவதாக சூளுரைத்துக் கொண்டார். நேர் வழியிலே ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்ற முடியாது என உணர்ந்த அவர் குறுக்கு வழியை நாடினார்: 1944ல் ஜே. ஆர். முன் மொழிந்த பிரேரணை தமக்குச் சமய சஞ்சீவியாக உதவுமென உணர்ந்துகொண்டார். தமிழுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டி விடுவதே ஆட்சியைக் கைப்பற்றும் வழி என உறுதிகொண்டு செயற்படத் தொடங்கினார்:

'24 மணி நேரத்தில் சிங்களத்தை ஆட்சிமொழி யாக்குவேன்', 'கடைசித் தமிழன் இலங்கை மண்ணில் இருக்கும்வரை தூங்க மாட்டேன்' என்ற முதலீடுகளுடன் அவர் தமது புதிய அரசியற் கடையை விரித்தார். 1944ல் தமிழ் செம்மொழி என்று செப்பிய தலைவர், 'தமிழ் இந்திய மொழியா? அது இந்திய மொழிகளிலேயேஇழிந்தது.' என்றெல்லாம் வகுப்புத் துவேஷ வாந்தி எடுக்க ஆரம்பித்தார்:

1944ல் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழியாக வேண்டுமென்ற பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்த டட்லி சேனநாயகாவும் அவருடைய தந்தை பெரிய சேனநாயகாவும் ஒரே மொழி, ஒரே இனம் என்ற ஏகாதிபத்தியக் கோணத்தில் சிங்கள மக்களைச் சிந்திக்கத் தூண்டியிருந்தமையால் பண்டாவின் தமிழ் இன, மொழி எதிர்ப்பு வெறிக் கொள்கை பிரபலமடைந்தது. எனினும், அவர் 1952 பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவராகவே வரமுடிந்தது: தமிழருக்கெதிரான அவரது வெறியூட்டும் பிரச்சாரம் தொடர்ந்தது.

### என். எம். பிரேரணையும் பண்டா திருத்தமும்

இரண்டாவது நாடாளுமன்றத்தின் இறுதிக் காலகட்டம் மொழிப் பிரச்சினைக்கு உருவமும் உத்வேகமும் கொடுப்பதாவமைந்தது. கலாநிதி என்.எம். பெரேரா முன்மொழிந்த தேசிய மொழிகள் பற்றிய பிரேரணை இதற்கு நல்ல களம் அமைத்துக்கொடுத்தது: 1955ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19ம் நாள் கலாநிதி என். எம். பெரேரா நாடாளுமன்றத்தில் பின்வருமாறு முன் மொழிந்தார்:—

'இலங்கை அரசமைப்புச் சட்டம் சிங்களமும் தமிழும் இலங்கையின் தேசிய மொழிகளாக நாடு முழுவதும் சம அந்தஸ்துடன் விளங்க வேண்டுமெனத் திருத்தப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது' என முன் மொழிகின்றேன்

பண்டாரநாயகா இம் முன்மொழிவு பின்வருமாறு திருத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

'இலங்கை அரசமைப்புச் சட்டம் சிங்களம் மட்டுமே இந்நாட்டின் தேசிய மொழியாக இருக்குமாறு திருத்தப்படவேண்டுமென இச்சபை கருதுகிறது.'

(அரசு அறிக்கை — தொகுதி 23, எண் 7 நிரல் 660, 19-10-55)

இந்த நாட்டில் தமிழும் சிங்களத்துடன் ஆட்சி மொழியாகச் சம அந்தஸ்துடன் இடம் பெற வேண்டுமென்ற பண்டா, 1955இல் தமது கொள்கையை மாற்றிக் கொண்டார். அன்று ஆதரித்த கொள்கையை இன்று ஏன் எதிர்க்கின்றீர்களென்று கேட்கப்பட்ட போது அவர் பின்வருமாறு கூறினார்.

'நாம் அன்று ஏன் ஆதரித்தோம்? அதற்கான காரணங்கள் இவையே. அக்காலத்தில் எமது உள்ளங்கள் ஆங்கிலத்துககு எதிராகச் சுய மொழிகள் என்ற

(9ம் பக்கம் பார்க்க)

## அடிபணிந்து வாழமாட்டேன்

(அக்கரை மாணிக்கம்)

ஏனத்தான் உங்களுக்கு விடுதலைதான்
இன்னுமா கிடைக்கவில்லை என்றுகேட்டு
தேனைத்தான் குழைத்தெடுத்து அஞ்சலாக்கித்
திருமகளே எனக்குநீ அனுப்பி வைத்தாய்
காணத்தான் துடிக்கின்றேன் உன்னை...ஆனால்
களமன்றோ அழைக்கிறது என்ன செய்வேன்
மானந்தான் எந்தனுக்குப் பெரிது; நானும்
மடிந்துவிட்டால் மாலையிடு பிணத்துக்கேனும்;

மானந்தான் பெரிதென்று வாழ்ந்த இனம்
மண்டியிட்டு வாழுவதா இந்த நாட்டில்
ஈனந்தான் தமிழினத்தைச சூழலாமா
இனிய தமிழ் சிறையிருந்து வாழலாமா
ஊனந்தான் எனது உடல் அடைந்திட்டாலும்
உயிர்கூட என்னுடலைப் பிரிந்திட்டாலும்
ஆனந்த சங்கரி நான் ஆகமாட்டேன்
அந்நியர்க்கு அடிபணிந்து வாழமாட்டேன்;

ஊனாக உயிராகத் தமிழிருக்க
உன்னுருவே எந்நெஞ்சில் நிறைந்திருக்க
பேனாகத் தலையேற ஓடி வரும்
பிறமொழியைப் பெரிதாகப் போற்றுவேனோ...?
தேனாக இனிக்கின்ற தமிழை விட்டு
சிங்களமாம் நஞ்சருந்த ஒப்புவேனோ...?
மானாக மடிந்திடுவேன் மானங் காக்க
மண்டியிட்டு வாழமாட்டேன் சூரியர் போல்...

காட்டுகின்றார் சிங்களவர் ஆதிக்கத்தை(க்)
கடவுளுக்கே பொறுக்காது காலம் சொல்லும்
மாட்டேன் நான் மாட்டினாய் மாற மாட்டேன்
மானந்தான் எந்தனுக்குப் பெரிது அன்னை
ஊட்டி விட்ட முலைப்பாலும் தமிழுணர்வும்
உடலோடு ஊறிவிட்ட உதிரமடி
நாட்டிடுவேன் தன்மானப் பண்பை நானும்
நம் காவடி தியாகராசா ஆகமாட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சி. நடராசா,
மீசாலை.

கே: ஆனந்தசங்கரிக்கும் ஆலாலசுந்தரத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: தமிழினத்தின் ஆனந்தத்தை சங்கரிப்பவர் ஆனந்தசங்கரி; தமிழ் பகைவர்களின் ஆலகால விஷம் ஆலாலு!

ஃ

ராம் மோகன்,
மட்டுநகர்.

கே: ஜெயகாந்தனைப்பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: ஜெயகாந்தனிட முள்ள திறமைக்கு நான் தலை வணங்குகிறேன்; அதே நேரத்தில் தலைக் கனத்தின் காரணமாக அறிஞர் அண்ணாவைவிட தானே அறிவாளி என்று கருதிக்கொண்டு அண்ணாவை இழிவாக விமர்சிப்பதுபோன்ற அவரது சின்னத்தனங்களை வெறுக்கிறேன்; அகந்தை பிடித்தவன் ஜெயகாந்தன் என்ற பெயரை அவர் எடுக்கக்கூடாது என்பதே என் விருப்பம்!

ஃ

ந. விஜயதாஸ்,
வல்வை நகர்.

கே: தமிழக முதல்வரின் மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கும் தந்தை செல்வாவின் சமஷ்டிக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமை யாது?

ப: காப்பிக்கு சர்க்கரை போதாது; கொஞ்சம் அதிகமாகப் போடும்படி கோருகிறார் கருணாநிதி! காப்பிக் கொட்டை வாங்கி இடித்து புதிதாக காப்பி போட முயற்சிக்கிறார் தந்தை செல்வா! — அதாவது ஏற்கெனவே இருக்கும் இந்திய சமஷ்டி அமைப்பில் மாநிலங்களுக்கு இப்போது தரப்பட்டிருக்கும் அதிகாரங்கள் போதாது; இன்னும் அவை அதிகரிக்கப்பட வேண்டும் என்கிறார் கருணாநிதி; இங்கோ, சமஷ்டி அரசியலமைப்பினையே முதன் முதலாக உருவாக்கும் ஆரம்ப முயற்சியில் தந்தை செல்வா ஈடுபட்டிருக்கிறார்!

ஃ

திருநாவுக்கரசு,
கொழும்பு-3.

கே: பிறநாட்டுப் பண உதவியை சிங்களப் பகுதியில் உபயோகிக்கும் பொழுது, தமிழ்ப் பகுதிக்கும் தமிழரசார் பெற்று தொழிற்சாலைகள் அமைக்கலாமே!

ப: அமைக்கலாம் — தமிழரசு ஏற்பட்ட பின்னர்!

ஃ

பொ: கலைச்செல்வி,
ஏழாலை.

கே: சமீபத்தில் இறந்த கவிஞர் மகாகவி பற்றிச் சில வரிகள் கூறுவீர்களா?

ப: சுதந்திரன் பண்ணையில் வளர்ந்த ஒப்பற்ற கவிஞர்; பழகுதற்கினிய நண்பர்; சோசலிசத்துக்காக தமிழ் மொழியுரிமையை காவு கொடுப்பதை அறவே எதிர்த்தவர்; தமிழ் மூவேந்தர்களைப் பற்றி பேசுவது பிற்போக்குத்தனம் என்றும் தமிழ் வெறி என்றும் முற்போக்குவாதிகள் என்று தம்மை கூறிக்கொள்பவர்கள் கிண்டல் செய்த நேரத்தில், துணிச்சலாக தமது பிள்ளைகளுக்கு சேரன், சோழன், பாண்டியன் என்று மூவேந்தர் பெயர் சூட்டி தமது தமிழ் பற்றை வெளிக்காட்டியவர்!!

ஃ

த: வசந்தாதேவி,
அக்கரைப்பற்று.

கே: தமிழ் மொழி அழிவதைப் பார்த்து ஆனந்தப்படும் தமிழ் மகனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அப்படிப் பட்டவனே தமிழ் சமுதாயத்திலிருந்து முதலில் களையப்படவேண்டியவன் என்று நினைக்கிறேன்!

ஃ

ந. சரோஜினிதேவி,
ஓமந்தை.
ஜானகி,
உடுவில்.

கே: தமிழரசுத் தளபதி அமிர்தலிங்கம் இப்பொழுது என்ன செய்கிறார்?

ப: இப்பொழுதல்ல — எப்பொழுதுமே தமிழ், தமிழினம், தமிழ் நாட்டின் விடுதலை பற்றியே சிந்தித்துக் கொண்டுவருபவர் அமிர்தலிங்கம்! திறந்த மனம்; பயன் கருதா உழைப்பு; மூச்சும் பேச்சும் செயலும், தமிழினத்தின் நலன்; சிங்கம் தன் பிடரி மயிரை சிலிர்த்து விட்டுக்கொண்டு கர்ச்சிப்பது போன்ற வீரமுழக்கம்; பழகுதற்கு இனிய பண்பு; இவற்றின் மொத்த உருவமான அமிர்தலிங்கம், 24 மணி நேரமும் இயக்கத்துக்காகவே உழைத்து வருகிறார்!

ஃ

கோ. கிருஷ்ண மூர்த்தி
விநாயகபுரம்,
திருக்கோவில்

கே: கட்சிப்போராட்டம் அஹிம்சையில்தானா நடத்த வேண்டும்? இவ்வளவு காலமும் தமிழ்த் தலைவர்கள் பெற்ற அவமதிப்பு போதாதா?

ப: அரை நிர்வாண பக்கிரி என்ற அவப்பெயரைக்கேட்ட பின்னும் அண்ணல் காந்தி அஹிம்சைப்போராட்டத்தை கைவிட்டாரா? இல்லையே!

ஃ

செல்வாதாசன்,
கொக்குவில்.

கே: தமிழ் இனத்துக்காக ஜீ. ஜீ. யும் சட்ட மறுப்பு செய்தாராமே! 1957 மாசித் திங்கள் 4ம் நாள். கடைகளை திறக்கச்செய்து சட்ட மீறல் செய்தாராமே உண்மையா?

ப: திரு. பொன்னம்பலம் தமிழரசுக்கட்சிக்கு எதிராக மற்போர் நடத்தினாரே தவிர அரசாங்கத்துக்கு எதிராக அல்ல. மாசி 4ம் நாள் இலங்கையின் சுதந்திரதினத்தை தமிழினத்தின் துக்கதினமாக அனுஷ்டிக்கும்படி தமிழ் மக்களுக்கு தமிழரசுக் கட்சி கோரிக்கை விடுத்திருந்தது: 1955, 1956ம் ஆண்டுகளில் நடைபெற்றது போலவே 1957 மாசி 4ம் நாளும் தமிழ்ப்பகுதிகளில் கடைகள் மூடப்பட்டு கறுப்புக்கொடி ஏற்றப்பட்டு துக்கம் அனுட்டிக்கப்படவேண்டுமென தமிழரசுக்கட்சி ஏற்பாடு செய்த நேரத்தில், தமிழரசுக்கட்சிக்குப் போட்டியாக, — கடைகளை மூடக்கூடாது; திறந்து வைக்கவேண்டுமெனதேவையற்ற ஒரு பிரச்சினையை தொடங்கி இறுதியில் மூக்குடைபட்டார் ஜீ. ஜீ.! சட்ட மறுப்பு செய்ய வேண்டும் என்று ஜீ. ஜீ. கருதியிருந்தால், நாட்டில் வேறு எத்தனையோ சட்டங்களை மீறியிருக்கலாமே! சிங்கள சிறீ எதிர்ப்பு சட்டமறுப்பு போராட்டத்தின் போது ஒரே ஒரு நாளில் போராட்டக் களத்திலிருந்து ஓடி மறைந்தவர் ஜீ. ஜீ. என்பதும், தமிழரசுக்கட்சியே இறுதிவரை அச்சட்டமறுப்பை தொடர்ந்து நடத்தி இறைச் சாலைவரை சென்றது என்பதும் தமிழ் மக்கள் அறிந்த உண்மைகளாகும்!

ஃ

இ. பி: குமார்,
நாவல்நகர்.

கே: யாழ் நகரிலுள்ள(மா) டின்களைப் பற்றி ஏன் இழிவாக எழுதியுள்ளீர்கள்?

ப: ஈழத் தமிழ் நாட்டின் எச்சில் கோப்பைகளாக விளங்கும் (மா) டின்களை போற்றும்படியா கூறுகிறீர்கள்?

ஃ

கே. இராசா,
அனுராதபுரம்.

கே: இரும்பினாலும் இரத்தத்தினாலும்தான் தமிழ் இனத்தின் இழந்த உரிமைகளை பெறலாம் என்று நான் கூறுகிறேன். நீங்கள்......?

ப: ஏற்றுக்கொள்ளுகிறேன் ஒரு திருத்தத்துடன் —அதாவது இரும்பு போன்ற உள்ளத்தினாலும் நமது இரத்தத்தை சிந்தி தியாகம் புரிவதனாலும்!

ஃ

கு. ஜெயசிங்கம்,
யாழ்ப்பாணம்.

கே: தமிழ் காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய கட்சி பா. உ. க்கள் மீது ஏன் இதுவரை நடவடிக்கையெதுவும் எடுக்கவில்லை?

ப: கட்சியென்று ஒழுங்கான அமைப்பு ஒன்று இருந்தால் அல்லவா ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு!

ஃ

இ: தேவராசா,
உருத்திரபுரம்.

கே: கலைஞனுக்கும் எம். பிக்கும் உள்ள வேறுபாடு என்னவோ?

ப: கலைஞன் ஏழையின் கண்ணீரை காணும் போதெல்லாம் கண்ணீர் வடிப்பான்: எம். பி. யோ ஐந்தாண்டுகளுக்கொரு முறை (முதலை) கண்ணீர் வடிப்பார்!

ஃ

அ: இராசலிங்கம்,
வவுனிக்குளம்,
2ம் யூனிட்.

கே: இந்தியப் பிரதம மந்திரிக்கும் இலங்கைப் பிரதம மந்திரிக்கும் உள்ள வித்தியாசமென்ன?

ப: குயிலுக்கும் காகத்துக்குமுள்ள வித்தியாசம் தான்!

ஃ

வே: தி: இரத்தினம்,
குருணாகல்.

கே: செனட் சபை ஒழிப்பினால் பறிபோகும் குமாரசூரியரின் மந்திரி பதவி திருவாளர் மாட்டினுக்கா அல்லது தியாகராயருக்கா?

ப: இருவருக்கும் பெரியதொரு பட்டை நாமம்தான் கிடைக்கப் போகிறது!

ஃ

என். திருச்செல்வம்,
நொச்சிமோட்டை.

கே. மூச்சனியன்களும் பிரதிநிதித்துவம் வகிக்கும் தத்தம் தொகுதிகளுக்கு என்ன நன்மை செய்திருக்கிறார்கள் இதுவரை?

ப: தொகுதிகளைப் பற்றி அதுகளுக்கு ஏது அக்கறை? எதிர்காலத்தில் தங்கள் மாஜி குருநாதரைப் பின்பற்றி மொட்டை வழித்து காவி [illegible] 'சங்கரி சங்கரி' சம்போ என்று பொதுமக்கள் பணத்தை கொள்ளையடித்த பாவம் தீர இறைவனின் 'அருள்' வேண்டி 'காவடி' எடுக்க வேண்டியதுதான் என்பதை அவர்கள் அறிவார்களே!

ஃ

நா. க. சின்னத்துரை,
தவசலி கிழக்கு.

கே: எனது சகோதரி ஒருவர் மகாத்மா காந்தியுடன் எம். ஜி. ராமச்சந்திரனை ஒப்பிட்டுப் பேசுகிறாரே. இது சரியா?

ப: மதுவிலக்குப் பிரச்சினையில் மட்டும் மகாத்மா காந்தியையும், எம். ஜி. ஆரையும் ஒப்பிடுவதில் தவறில்லை— காந்திஜி எப்படி மதுவை வெறுத்தாரோ அப்படியே மதுவை வெறுப்பவர் எம். ஜி. ஆர்!

ஃ

சி: முருகையா,
வவுனியா.

கே: தமிழ் இனத்தைக் காட்டிக்கொடுக்கும் துரோகிகள் யார்?

ப: ஒரு இரத்தத்தில் உற்பவிக்காதவர்கள்!

ஃ

நாதன்
திருகோணமலை

கே: தமிழரசு எம். பீக்கள் போராடத்தயாரான நிலையில் இருந்தாலும் தமிழ்ப் பேசும் மக்கள் தயாரான நிலையில் இல்லை என்பதை தமிழரசு பா. உ. வினர் அறிவார்களா?

ப: மக்களை விடுதலைப் போருக்கு தயாராக்குவதும் தமிழரசுக்கட்சியின் ஒரு முக்கிய திட்டம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்!

ஃ

சி. ஜானகி
உடுவில்

கே: உலகத்தில் பொறுமையும் வஞ்சனையும் நிறைந்த மிருகம் எது?

ப: 'மனித' மிருகம்!

கே: குமார சூரியரை மக்களுக்கு எப்படி நீங்கள் அறிமுகப்படுத்துவீர்கள்?

ப: ஈழத்தமிழினத்தை 'கலப்பு சாதி' என்று அழைத்த கலப்பு சாதி தமிழர் என்று!

கே: ஆண்டவன் யாரை மன்னிக்கமாட்டான்?

ப: தன்னையே ஏமாற்ற நினைப்பவனை!

ஃ

சிவா செல்லையா:
கோதண்டர் நொச்சிக்குளம்
வவுனியா

கே: வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. செல்லத்தம்பு அவர்கள் அனுபவசாலியா திறமைசாலியா?

ப: இரண்டும் நிறைந்தவர்!

ஃ

அ: மக்சன்
கருக்குப்பனை

கே: சுதந்திரன் வார இதழை தமிழக முதல் அமைச்சர், மு. கருணாநிதி அவர்கள் வாசிப்பதாகக்கேள்விப்பட்டேன். அது உண்மைதானா?

ப: அவர் வாசிப்பது மட்டுமல்ல—சுதந்திரனில் வரும் கருத்துக்கள் அவரது ஏடான முரசொலியில் அடிக்கடி மறுபிரசுரம் செய்யப்படுகின்றன: கடைசியாக 'தமிழ் அர்ச்சனை' பற்றி 5. 9. 71 சுதந்திரன் தீட்டிய ஆசிரியத் தலையங்கத்தை 9. 9. 71 முரசொலி மறுபிரசுரம் செய்திருக்கிறது!

ஃ

எஸ். ஆனந்தசோதி
வவுனியா.

கே: தொடர்ந்து தங்களைக் கேள்விகேட்பவர்களைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப: கற்றாரைக் கற்றாரே காமுறுவர்!

ஃ

ப. சாரதாதேவி
பண்ணாகம் வடக்கு

கே: மூன்று காவடிகளும் பாராளுமன்றத்தில் எக்கொள்கையை பின்பற்றுகிறார்கள்?

ப: நசிந்து குழைந்து நக்கும் கொள்கையை!

ஃ

பி. கிருபாஸ்கரன்,
நல்லூர்.

கே: ஈழத் தமிழகத்து முதல்வர் செல்வா, தமிழ் நாடு முதல்வர் கருணாநிதி ஆகிய இருவரைப்பற்றியும் தங்கள் கருத்து என்ன?

ப: இருவரும், தமிழன்னை இரண்டாயிர மாண்டுகளாக தவமிருந்து பெற்ற செல்வங்கள்!

ஃ

எம்: கே. தம்பி,
கற்கோவளம்,
பருத்தித்துறை:

கே: செனட்சபை ஒழிந்த பின் தினபதியார் எப்பதவிக்கு ஆசைபடுவார்?

ப: தோல் வியாபாரக் கடை மானேஜர் பதவிக்கு ஆசைப்படலாம்!

ஃ

காரை திலகர்,
கொழும்பு 12.

கே: மன்னிக்க முடியாத குற்றம் எது?

ப: வயிற்றில் வளரும் கருவை அழிப்பது!

ஃ

புவனநாயகி செல்வநாயகம்
நொச்சிமோட்டை

கே: காலஞ்சென்ற பண்டாரநாயகா அவர்களுடைய சோசலிசக் கொள்கையை பற்றிச் சுருக்கமாக கூறுங்கள்!

ப: 'பண்டாரநாயக சோசலிசம்' என்று ஒரு சோசலிசம் இருப்பதாக எனக்குத் தெரியாது. அதைப் பற்றி வேண்டுமானால் சம சமாஜிகள், கம்யூனிஸ்டுகளிடமே கேளுங்கள். நான் அறிந்தவரை சோசலிசக் கொள்கை ஒன்றே ஒன்று; அதைத்தந்தவர் கார்ல் மார்க்ஸ்!

ஃ

சி. ஐ. டி. சங்கர்,
திருகோணமலை.

கே: எமது தினசரிகள் எல்லாம் அதிக விற்பனை தமக்குத்தான் என்று ஒவ்வொன்றும் கூறிக்கொள்கின்றனவே...!

ப: வெறும் பாத்திரங்கள் அதிகம் சத்தம் போடும் (Empty Vessals Make More Sound!) என்பது உங்களுக்கு தெரியாதா?

ஃ

க. ஜெயன்,
மாதகல்.

கே: மனிதனின் இறுதி யாத்திரையன்று ஊரெல்லாம் ஒன்று கூடி அழுவது ஏன்?

ப: தங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நாள் வரவிருக்கும் இறுதி யாத்திரையை நினைத்து.

வெட்டி ஒட்டப்பட வேண்டிய முகவரி—

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## புதிய அரசியலமைப்பும் தமிழ் பேசும் மக்களும்

வேஷம் கலைந்தது! சூழ்ச்சி அம்பலமாகியது!

புலி போர்த்திருந்த பசுத்தோல் கழன்று வீழ்ந்து அதன் கூரிய நகங்கள் வெளியே தெரிந்துவிட்டன!

ஆம், புதிய அரசியலமைப்பு சம்பந்தமாக அரசாங்கம் நுனி நாக்கில் இனிப்பும் அடி நாக்கில் நஞ்சுமாகவே நடந்து வந்திருக்கிறது என்பதை அதன் அமைச்சர் ஒருவரே ஐயத்துக்கிடமின்றி அம்பலமாக்கி விட்டார்!

தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மைப் பிரதிநிதிகளுக்குஅதாவது தமிழரசுக்கட்சிப்பிரதிநிதிகளுக்கு — அரசியல் நிர்ணய சபையில் பங்கு பற்றும்படியும் பிரச்சினைகளை விவாதித்துத் தீர்த்துக் கொள்ளலாமென்றும் இந்நாட்டுப்பிரதம அமைச்சர் விடுத்த அழைப்பு திறந்த மனத்துடனுனதல்ல; அந்தரங்க சுத்தியானதல்ல; நேர்மை நிறைந்ததல்ல; மாருக சூழ்ச்சியும் கபடமும் நிறைந்தது என்பதை பிரதமரது சக அமைச்சர்களில் ஒருவரே ஐயந்திரிபற இப்போது அறிவித்து விட்டார்.

அரசியல் நிர்ணய சபையில் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளும்படி அரசு அழைத்தது—தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை வழங்குவதற்காக அல்ல—தமிழ் அரசுக்கட்சிப் பிரதிநிதிகளை தாம் கொண்டுவரும் ஒற்றையாட்சி தனிச்சிங்கள பௌத்த குடியரசு அமைப்பை ஏற்றுக்கொள்ளும் படி செய்யவே என்பதை இந்த அமைச்சர் பகிரங்கப்படுத்தி விட்டார்! சாக்கிலிருந்த பூனையை வெளியே விட்டு விட்டார்!

ஆம், செனட்சபை ஒழிப்பை கொண்டாடும் முகமாக அரசாங்க லிகிதர் சேவைச்சங்க கட்டடத்தில் நடைபெற்ற லங்கா சம சமாசக்கட்சிக் கூட்டத்தில் போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தன பின்வருமாறு பேசியிருக்கிறார்:—

**"புதிய அரசியலமைப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப் படுவதில் காலதாமதம் ஆவதற்கு தமிழரசுக்கட்சியே முக்கிய காரணமாகும். அதிகப்படியான தமிழர்களின் பிரதிநிதிகளான தமிழரசுக்கட்சியினரைக் கலந்தாலோசியாமல் நாம் இத்திட்டத்தை அமுல் படுத்தியிருந்தால் அவர்கள் புதிய அரசியலமைப்பு திட்டத்தைப் பகிஷ்கரித்திருப்பார்கள். அதுமட்டுமன்றி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்உதவியுடன் வடமாகாணத்தைதனி நாடாகப் பிரகடனப்படுத்தவும் துணிந்திருப்பார்கள். அதனுல்தான் அவர்களையும் கலந்து அவர்களது சம்பிரதாயங்களுக்கு தலையசைத்துக் கொண்டு அவர்களையும் சம்பந்தப்படுத்திக்கொண்டு இத்திட்டங்களை உருவாக்கி வருகிறேம்."** (ஆதாரம்: வீரகேசரி 29-9-71)

இதுவே அமைச்சரின் கூற்று ஆகும். இதில் இரண்டு விஷயங்களை அமைச்சர் ஒப்புக்கொண்டிருக்கிருர். அதாவது தமிழரசுக்கட்சியே பெரும்பான்மையான தமிழ் மக்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கிறது என்பது ஒரு விஷயம். அடுத்தது தமிழரசுக்கட்சி இந்நாட்டு அரசியலில் ஒரு பலம் வாய்ந்த சக்தியாக—கேந்திரஸ்தானத்தை வகித்து வருகிறதுஎன்பது. இந்த இரண்டு பெரிய உண்மைகளையும் அமைச்சர் ஒருவர் தமது வாயினுலேயே கக்கி விட்டதைக்கண்டு உவகையடைகிறேம்.

ஆனுல் அதே நேரத்தில்—தமிழரசுக்கட்சி தமிழினத்தின் சார்பில் விடுத்த உரிமைக் கோரிக்கைகளை—திருத்தங்களை வெல்லாம் உதாசீனம் செய்து அரசியல் நிர்ணய சபையில் அவற்றை தமது மிருகத்தனமான பெரும்பான்மை பலம் கொண்டு தூக்கியெறிந்துவிட்டு— தாம் கொண்டு வரவுள்ள புதிய சிங்கள ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தை தமிழரசுக்கட்சி ஏற்றுகொள்ளும் என்று இனியும் போக்குவரத்து அமைச்சரோ, ஆளுங்கட்சியினரோ எதிர் பார்த்திடுவது தான் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது!

அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானங்களுக்கு, தமிழினத்தின் ஜீவாதார உரிமைகளை வலியுறுத்தி தமிழரசுக் கட்சி கொண்டு வந்திருந்த ஒவ்வொரு திருத்தமும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. வல்வையில் ஏற்றுக்கொள்ளப் பட்ட அனைத்துத்தமிழ்க்கட்சிகளின் ஒன்பது அம்சக்கோரிக்கையில் ஒன்று கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இறுதியில் தமிழ் மொழியுரிமைகளைக்கூட அரசியலமைப்பில் சேர்த்துக் கொள்ள முடியாதெதன அரசு கை விரித்து விட்டது. இந்நிலையில் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறி அதைப் பகிஷ்கரித்து வருகிருர்கள் தமிழரசுப்பிரதிநிதிகள்!

**அரசியல் நிர்ணய சபையை தமிழரசுக்கட்சி பகிஷ்கரிக்கிறது என்றுல் அச்சபை உருவாக்கித்தரவிருக்கும் புதிய அரசியல் அமைப்பையும் தமிழரசுக்கட்சி ஏற்றுக்கொள்ளாது என்பது தான் அர்த்தம்.**

எனவே தமிழ் பேசும் மக்களை மீளா அடிமைகளாக்குகின்ற—தமிழினத்துக்கு கொள்ளி சொருகுகின்ற — புதிய அரசியலமைப்பினை பெரும்பான்மை தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கும் தமிழரசுக் கட்சியோ, தமிழ் பேசும் மக்களோ அப்படியே ஏற்றுக் கொண்டு அமைதியடைவார்கள் என்று தப்புக்கணக்குப் போட வேண்டாம் என்று அமைச்சர் லெஸ்லிக்கும் ஆளுங்கட்சியினருக்கும் எடுத்துரைக்க விரும்புகிறேம்:

## பழைய தமிழ் அரச ஊழியர்கள் மீண்டும் பழி வாங்கப்பட்டனர்!

இம்முறையும் அரசாங்க எழுதுவினைஞர் நிறைவேற்று தரம் Iற்கான பதவி உயர்வில் சிங்களம் சித்தியடையவில்லையென்ற காரணத்தால் பழைய தமிழ் ஊழியர்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளனர்.

திறைசேரிச் சுற்று நிருபம் 700, 701 ஆகியவற்றின்படி சிங்களம் மட்டும் சட்டத்திற்கு முன் அரசசேவையிற் சேர்ந்தவர்களுக்குச் சிங்களத்தில் தகைமை பெற வேண்டிய அவசியமில்லையென்று கூறப்பட்டுள்ளது. மேலும், பழைய ஊழியராகக் கணிக்கப்பட்டவர்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றனவற்றிற்குச் சிங்களம் ஒரு தகைமையாகக் கணிக்கப்படமாட்டாதென்றும் கூறப்பட்டுள்ளது.

திறைசேரிச் சுற்று நிருபத்தில் சிங்களத் தகைமை தேவையற்றது என்று கூறப்பட்டிருக்கும்போது நடைமுறையில் சிங்களத்தகைமை பார்ப்பது அரசாங்கத்தின் சட்ட திட்டத்தையே மீறும் செயலாகும். அரசாங்கம் வகுத்த, ஏற்றுக் கொண்ட 700, 701 சுற்று நிருபங்களை மீற அரசாங்கமே முனைந்துள்ளது மிகவும் கீழ்த்தரமான செயலாகும்.

பழைய ஊழியரைப் பொறுத்தவரை சிங்களம் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை என்னவென்று கூருமல் தமிழ் அரசாங்க ஊழியரைச் சிங்களம் படிக்கவில்லையென்பதற்காகப் பழிவாங்குவது முறையா, அதுதான் நீதியா என்பதை அரசாங்கமும், பொதுநிருவாகஉள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ பிலிக்ஸ் ஆர்.டயஸ்பண்டாரநாயகா அவர்களும் உணர வேண்டும்.

ஒரே அளவு வேலை செய்தும், சிங்களத் தகைமை தேவையில்லையென்ற விதி இருந்தும் சிங்களத்தகைமை பார்த்துத் தமிழ்ஊழியர்கள் புறக்கணிக்கப்படுவது மனிதாபிமானமான செயலல்ல; கடைந்தெடுத்த வகுப்புவாதம்;

கடந்தமுறை இவ்வாறுன புறக்கணிப்பு நடைபெற்றபோது அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும், தமிழரசுக்கட்சியும், பிரதமருக்கும்,பொது நிருவாக அமைச்சருக்கும் புறக்கணிப்பு பிழையானது என்பதைச் சுட்டிக் காட்டிக் கடிதங்களெழுதியும் இதுவரை ஒரு உறுதியான பதிலும் கிடைக்கவில்லை.

## 46 தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலமற்ற தமிழர்களின் நிலையென்ன? இவர்கள் எங்கு வாழ்வது: வந்தவர்கள் எல்லாம் இங்கு நிலையாக வாழும் போது நிரந்தரமாக வாழ்ந்த தமிழ்க் குடும்பங்கள் இப்படியான நிலைமையில் ஏன் இன்று திண்டாட வேண்டும். எனவே இதுசம்பந்தமாக அரசாங்கம் நீதியான முறையில் நடந்து நிலமற்ற இந்தத் தமிழ் குடும்பங்களை அந்த ''சான்டிக்கொ'' பகுதியில் வாழ்வதற்கு வழியமைப்பது தான் நீதியாகும்.

அரசாங்கம் இது சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கைகளில் தான் இவர்களின் வாழ்வு தங்கியுள்ளது. அரசாங்கத்தின் நீதியான முடிவை நிலமற்ற இந்தத் தமிழர்களுடன் இலங்கை வாழ் தமிழ் பேசும் இனமே எதிர்பார்த்திருக்கின்றது.

(மூதூர் நிருபர்)

## செல்லத்தம்புவை புறக்கணிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் அழைக்க இப்போது முயன்றதாக தெரிய வருகிறது. வவுனியா மாவட்ட கல்வி அதிகாரி, வவுனியாத் தொகுதியில் பொதுவுடமைக்கட்சியில்போட்டியிட்டு தோல்வியடைந்த திரு. பத்மநாதன், சந்திரசேகரம் என்றெரு ஆசிரியர் ஆகியோரே இதன் பின்னணியில் இருந்தார்களாம். செப்டம்பர் 28, 29 தேதிகளில் துணை அமைச்சர் விஜயத்துக்கு திட்டமிடப்பட்டிருந்ததாம்.

ஆனுல் 28. 9. 71ல் திரு. செல்லத்தம்புவுக்கு திரு. துடாவை அனுப்பியுள்ள அவசரத்தந்தியில தமது உத்தேச வருகையை ஒத்திப்போட்டுள்ளதாகவும், இதை அமைப்பாளர்களுக்கு கூறும்படியும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு திரு. செல்லத்தம்பு உடனடியாக பதிலளித்தார். அப்பதிலில் துணை அமைச்சரது விஜயம் பற்றி தமக்கு எதுவுமே தெரியாதென்றும், தமக்கு அறிவிக்காமல் தமது தொகுதிக்கு துணை அமைச்சர் வரவிருந்ததை அவரது தந்தியிலிருந்தே தாம் அறிந்ததாகவும் எனவே அமைபபாளர்கள் யார் என்பது தெரியாமல் அவர்களுக்கு தகவல் தருவது தம்மால் சாத்தியமில்லை என்றும் சுட்டிக்காட்டிருந்தார்.

அத்துடன் கல்வியமைச்சர் பதியுதீன்மாமுத்துக்கு திரு. செல்லத்தம்பு எழுதியுள்ள கடிதத்தில், நெடுங்கேணிக்கு நீங்கள் வருவதாகவும், 28-9-71ல் துணை அமைச்சர் [illegible] விருக்கும் வரவேற்பில் நீங்களும் உரையாற்றுவீர்கள் என்றும் நெடுங்கேணி பெற்றுர் ஆசிரிய சங்கம் அறிவித்திருந்தது: அத்துடன் பெற்றுர் மாணவர்களிடமிருந்து பணமும் சேர்க்கப்பட்டன; நீங்கள் வவுனியாவுக்கு எனக்குத் தெரியாமல் வரவிருந்தீர்களா என்பதை அறியத் தரவும். இன்றேல் உங்கள் பெயரை உபயோகித்து பொது மக்களை ஏமாற்றியவர்கள் மீது உடனே விசாரணை நடத்தவும் என்று குறிப்பிட்டுள்ளார். இதையடுத்து சம்பந்தப்பட்ட நெடுங்கேணி பெற்றுர் ஆசிரிய சங்கத்தின் மீது கல்வியமைச்சர் பூரண விசாரணை ஒன்றை நடத்தி கடும் நடவடிக்கையெடுக்க உத்தரவிட்டுள்ளதாக தெரிகிறது.

## சிங்களத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுத வேண்டுமென்றும் தாம் உத்தரவிட்டிருப்பதாக பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ்: ஆர். டயஸ் பண்டாரநாயகா அறிவித்துள்ளார்! காலஞ்சென்ற பண்டாரநாயகா நினைவு தினக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய முன்னணி அரசின் தனிச் சிங்கள வெறி எவ்வளவு தூரம் படமெடுத்தாடுகிறது என்பதற்கு பீலிக்ஸின் புதிய உத்தரவு தக்க உதாரணமாக இருக்கிறது: ஆளுங் கட்சியின் தமிழ் கலிப்பலைகள் இதற்கு என்ன சொல்லப் போகின்றன?

## பைத்தியம்! பைத்தியம்!! பைத்தியம்!!!

தினபதியார் மீண்டும் சென்றவாரம் பைத்தியக்காரத்தனமாக உளறியிருக்கிருர். இம்மாதம் 30ம்திகதி தெல்லிப்பளையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள அரசினர் ஆஸ்பத்திரியை சுகாதார அமைச்சர் திறந்து வைத்தார். இத்திறப்பு விழாவுக்கு காங்கேசன் துறைப் பா. உ. திரு. சா ஜே. வே. செல்வநாயகம் தலைமை வகித்திருக்கிருர். இச்சம்பவத்தைவைத்துக்கொண்டு தமிழரசுக் கட்சி ஏதோ கொள்கையை சோரம் போக விட்டுவிட்டதாக ஓலமிட்டிருக்கிருர் 29-9-71 இதழில் தினபதியார்.

அமைச்சர் காங்கேசன் துறைக்கு விஜயம் செய்தது உத்தியோக ரீதியில் — அதாவது பொதுமக்களின் முக்கிய தேவையான ஆஸ்பத்திரியை திறந்து வைப்பதற்கு. இந்த வைபவத்தில் காங்கேசன் துறை பிரதிநிதி என்ற முறையில் கலந்து கொள்ளவேண்டிய கடமையும் உரிமையும் செல்வாவுக்குண்டு. அக்கடமையையே தமிழரசுத் தந்தை சரிவர நிறைவேற்றியுள்ளார்!

அமைச்சர்களின் உத்தியோக ரீதியிலான (தொகுதிகளின் தேவைகள் சம்பந்தபட்ட) விஜயங்களை பகிஷ்கரிப்பதென்று தமிழரசுக் கட்சி இதுவரை தீர்மானிக்கவில்லை; அமைச்சர்களுக்கு கொடி, குடை, ஆலவட்டம் சகிதம் அளிக்கப்படும் ஆடம்பர வரவேற்புக்களையும் கேளிக்கை விருந்துகளையும் பகிஷ்கரிப்பதென்று தான் கட்சி தீர்மானித்திருக்கிறது. அதிலிருந்து கட்சி பா. உ.க்கள் யாரும் இதுவரை பிறழ்ந்ததில்லை!

வடபகுதிக்கு மின்சார திட்டத்தை ஆரம்பித்து வைக்க மைத்திரிபாலா சென்ற போதும் தமிழரசு பா. உ.க்கள் அதில் கலந்து கொண்டிருக்கிருர்கள்.

எனவே விஷயத்தை சரிவரப் புரிந்து கொள்ளாமல் தமது வழமையான 'குக்கல்' குணத்தை இதிலும் காட்டி தமிழரசுககட்சிக்குள் குட்டை குழப்பி விடலாமென்று கருதி வீணுக பக்கங்களை கரியாக்கியிருக்கும் தினபதியாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

தனது கொள்கையை காப்பாற்றிக் கொள்ள தமிழரசுக் கட்சிக்கும், தமிழரசுத் தந்தைக்கும் தெரியும். தினபதியார் பைத்தியக்காரத்தனமாக அலட்டிக்கொள்ளாமல் இருப்பாராக!

— எரியீட்டி.

## தியாகிகள் நினைவு தினம்!

வழுக்கம்பரையில் அண்ணு கலை மன்றத்தினர் வரும் 2-10-71 சனிக்கிழமை மாலை தியாகிகள் நினைவு விழாவை விமரிசையாக கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். காந்தி, அண்ணு, பாரதி, வன்னியசிங்கம், நாகநாதன் ஆகிய தியாகிகளைப்பற்றி திரு. அமிர்தலிங்கம் சொல்லின் செல்வர் செ. இராசதுரை, திரு. செல்லச்சாமி, கரிகாலன், முன்னுள் உப சபாநாயகர் மு. சிவசிதம்பரம், திரு எக்ஸ். எம். செல்லத்தம்பு ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஏகாதிபத்தியத்தின் கங்காணிகள்

# விரித்துள்ள வலையில் தமிழினம் வீழக்கூடாது!

## கோண்டாவில் கூட்டத்தில் · தமிழரசுப் பொதுச்செயலாளர் எச்சரிக்கை!



நான் எவர்க்கும் அடிமையாகிவிட மாட்டேன். வாழ்ந்தால் சுதந்திரமாக வாழ்வேனேயற்றி, எவர்க்கும் விலை போக மாட்டேனென்று வாழ் நாள் முழுவதும் சிங்க நாதம் புரிந்ததுமாத்திரமன்றி, செயலிலும் காட்டிவிட்டு, எம்மைவிட்டு பிரிந்துவிட்ட மாமேதை அமரர் நாகாவை நினைக்கும் போது சுதந்திர உணர்வு ஏற்படுகின்றது. அவரது வாழ்வு தியாக வாழ்வு வீர வாழ்வு...

இவ்வாறு, தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் கோண்டாவிலில் திரு. சொ. கோபாலசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 'நாகா' இரங்கல் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

மேடை மீது டாக்டர், தனது 'ஆசான், ஜெனரல்' என்று அன்பொழுக அழைக்கும் கொக்குவில் சி. பொ. வேலாயுதபிள்ளை அவர்களால் அன்பளிக்கப்பட்ட பெரிய அளவிலான 'அமரர் நாகா'வின் உருவப்படம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது.

### அஞ்சாமையின் சின்னம்

அமரர் நாகா விரும்பியிருந்தால், இந்நாட்டின் முழு மந்திரிகளில் ஒருவராகியிருக்கலாம். முதல் பிரதமர் டி. எஸ். காலத்திலிருந்து இன்றைய பிரதமர் சிறிமா வரைக்குமுள்ள அத்தனை பிரதமர்களுக்கும் குடும்ப நண்பராக விளங்கியவர் அமரர் நாகா ஒருவரே, குடும்ப நண்பரானாலும் அற்ப சலுகைக்காக விலை போகாதவர், இன்று தமிழினம் அஞ்சி அஞ்சிச் சாகுமினமாக மாறிவிட்டது. அமரர் நாகா அஞ்சாமையின் சின்னமாகவே வாழ்ந்தார். அவர் நினைத்திருந்தால் பெரிய செல்வச் சீமானாக வாழ்ந்திருக்கலாம்.

தனது இனம் இந்நாட்டில் அடிமையினமாக வாழும் நிலையினைக் கண்டு வேதனைப்பட்டார். இந்நாட்டில் தமிழினம் தலை நிமிர்ந்து நிற்கும் வரை ஓயமாட்டேனென்று, அவர்பட்ட கஷ்டங்களை இனத்திற்காக செய்த தியாகத்தை சிந்திக்காத, நன்றிக்கடன் புரியாத இனமாக எமது இனம் இன்று மாறிவிட்டது.

### இன்றைய இளைஞர்களின் அறியாமை

தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரையில் இன்று சிங்கள இனத்தைப் பற்றியும் தலைவர்களைப் பற்றியுமே நன்கு அறிந்திருக்கின்றார்கள். ஆனால் எமது தமிழ் தலைவர்களைப் பற்றி எவ்வளவு தூரம் அறிந்திருக்கின்றார்களென்று கேட்கின்றேன். தமிழ் சமுதாயம் உரிமை பெற்ற இனமாக வாழவேண்டுமென்பதற்காக மூன்று தடவைகட்கு மேலாக அமரர் நாகா சிறைசென்றார் காடையர்களால் இனம் கண்டு தாக்கப்பட்டார். சிறையும் சித்திரவதையுமே அவரை பலிவாங்கியது.

### உலகத்தலைவன் நாகா

தனது இனம் சுயநிர்ணய உரிமை பெற்று வாழ வேண்டுமென்பதற்காக போராடிய, தியாகி ஷேக் முஜிபுர்ரகுமான் போன்ற உலகத் தலைவர்கள் வரிசையிலே இடம் பெற வேண்டிய தலைவன் நாகா என்றால் மிகையாகாது. வாழையடி வாழையாக வாழ்ந்த இனம் தமிழினம். இராவணனுக்கு முற்பட்டகாலமே தமிழ் தோன்றிவிட்டது; ஐரோப்பியர் நியூசிலாந்தைக் கண்டு பிடிப்பதற்கு முன்னர் அங்கு தமிழ் நாட்டு மாலுமிகள் வாழ்ந்திருக்கின்றார்களென்று ரஷ்யர்கள் நடாத்திய ஆராய்ச்சியின் பின்னர் கூறியிருக்கின்றார்கள். மாலுமிகள் பாவித்த படகிலே தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதாக கூறியிருக்கின்றார்கள். இது கட்டுக் கதையல்ல...

இப்படியெல்லாம்வாழ்ந்த தமிழினத்தைத்தான் இன்று ஒழிப்பதற்குச் சதி நடக்கின்றது. தோட்டப் பகுதி மக்களைக் கண்காணிக்க கங்காணிகள் இருப்பதுபோல, தமிழினத்தைக் கண்காணிக்க அரசியல் கங்காணிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள், தமிழினம் கால்பிடித்து வாழும் நிலையினைக் கண்ட நாகாவின் இதயம் எதையாவது செய்ய வேண்டுமென்றுதான் துடித்துக் கொண்டிருந்தது.

பாரதியை நினைக்கும் போது நாடிநரம்பெல்லாம் சுதந்திர முறுக்கேறுகின்றதென்று நாமக்கல் கவிஞர் கூறினார். அதேபோல வீரத் தலைவன் நாகநாதனை நினைக்கும் போது சுதந்திரமுறுக்கேறுகின்றது. நாகா எம்மை விட்டுப் பிரியும் வரை ஆற்றிய சேவைகளை, தொண்டுகளை தியாகத்தினை என்றும் அழியாத வீரவரலாறாக வடித்தெடுத்து எமது வருங்கால இளம் சந்ததியினர்க்கு சமர்ப்பிக்கவேண்டும். இதுவே நாம் செய்யக்கூடிய உயர்ந்த அஞ்சலியாகும்.

—இவ்வாறு அமிர்தலிங்கம் அவர்கள் உரையாற்றினார்கள்.

### உடுவில் தர்மலிங்கம்

அடுத்து உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் பேசும்போது கூறியதாவது:— இன்று எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் அதில் அரசியல் கலவாமலில்லை முழுக்க முழுக்க அரசியல் வாதியாகவே வாழ்ந்து அரசியலுக்காகவே தன்னை அர்ப்பணித்துவிட்ட அமரர் நாகாவைப்பற்றி சிந்திப்பதானால் அரசியல் வாயிலாகவே சிந்திக்கவேண்டும். சின்ன விசயங்களையெல்லாம் அரசியல் பிரச்சினையாக்கியவர்களே இன்று நாகா இரங்கல் கூட்டங்களில் அரசியல் பேச வேண்டாமென்று தடை போடுகின்றார்கள்.

அமரர் நாகா ஆரம்பத்தில் தமிழைப்பற்றி நன்கு அறியாதவர். அவர் நினைத்திருந்தால் ஆங்கில மோக வாழ்க்கையையே நடத்திக் கொண்டிருக்கலாம். அவர் அதை விரும்பவில்லை. எங்கு யார் அடிமைப்படுத்தப்படுகின்றார்களோ அவர்கள் யாராயிருப்பினும் அவர்களுக்காக வாதாடத்தயங்கியதில்லை தனது படிப்பை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பிய சமயம் இங்கு தமிழினம் அடிமைப்பட்டிருப்பதை யுணர்ந்து அவர்களுக்காக பாடுபட்டார்.

உலகில் 36 நாடுகளில் வாழ்ந்துகொண்டிருந்த தமிழ் மொழி காலப்போக்கில் இனக் கலப்பின் மூலம் ஒழிக்கப்பட்டு இன்று மூன்று நாடுகளில் மாத்திரமே வாழுகின்றது. வெளிநாடுகளில் தமிழுக்கு என்னகதி நேர்ந்ததோ, இதே கதி ஈழத்திற்கும் வந்துவிடும் என்று அஞ்சினார். அரசியலைக்கொண்டு தமிழினத்தை எப்படியும் அழித்துவிடுவார்களென்றுதான், தமிழினத்திற்குப் பாதகமான 'சோல்பரி' அரசியல் திட்டத்தினை எதிர்த்தார். இந்நாட்டுக்கு புதியவொரு அரசியல் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று செனட் சபையில், 'அரசியல் நிர்ணய சபை'க்கான பிரேரணையைக் கொண்டுவந்த ஒருவர் இருப்பாரானால் அது அமரர் நாகா என்பதில் தமிழினம் பெருமையடைய வேண்டும். தாய்மொழிக்காகப் போராடிய வேளையிலும் நாட்டுப் பற்றும் மிகுந்து காணப்பட்டது. நாடு வாழ்ந்தால்தான் இனம் வாழமுடியுமென்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

அமரர் நாகாவின் ஆலோசனையை ஏற்று இந்நாட்டு அரசியல் திட்டத்தை ஏற்கனவே மாற்றியமைத்து தமிழுக்கும் உரிமை தரப்பட்டிருந்தால் இன்று இனத்தின் தலைவிதியே வேறு விதமாய் அமைந்திருக்கும். அவர் உண்மையிலேயே ஒரு வீரன் என்பதற்கு 61ம் ஆண்டு கச்சேரி வாயிலில் நடைபெற்ற சம்பவமொன்றே போதுமானது; அன்று அவர் எடுத்த இடத்தினை இன்று யார் எடுக்கப் போகின்றார்களென்ற கேள்விதான் இன்று எம்மிடையே எழுந்துள்ளது. என்று திரு. தருமர் குறிப்பிட்டார்.

### கோப்பாய் பா. உ. உரை

அடுத்து கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் பேசும்போது, கூறியதாவது:—

மனித வாழ்விலே காலத்துக்கு காலம் சோதனைகள் நிறைந்த தாழ்வுச் சிக்கல்கள் ஏற்படுவது இயல்பே இதைக்கண்டு நமக்கென்ன என்று ஒதுங்குவது சுயநலத்தினாலன்றி வேறெதற்காகவுமல்ல. அரசியலைப் போக்கிரிகளின் புகலிடமென்று ஒதுக்குபவர்கள் தாங்கள் பெறப் போகின்ற அற்ப சலுகைக்காகத்தான் ... அரசியல் வேண்டாமென்று கூறுபவரும், அரசியலில் ஈடுபடுபவர்களும் ஒரே நிலையில்தான் வாழுகின்றார்கள். அமரர் நாகாவைப பொறுத்த வரையில் இவையெல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட மனிதர் அவர் ... தனக்கு வரும் துன்பம் இனத்திற்கு வரும் துன்பமாகவும் இனத்திற்கு வருவது தனக்கு வரும் துன்பமாகவும் கருதி வாழ்ந்தார். தனது இனம், மதமென்று ஒதுங்காது மனிதர் என்றால் ஒரு இனமென்று கருதினார். தார்மீக பொறுப்புணர்ச்சி வாய்ந்தவர். ஒரு இனத்திற்கு வரும் தீங்கு எல்லாருக்கும் பொறுப்பு என்று கருதி அதை சாதனையிலும் காட்டியவர். எங்கே அநியாயம் நடக்கின்றதோ அது எல்லோருக்கும் பொறுப்பு என்பதே நாகா காட்டிய இலக்கணமாகும்.

அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்த கெனடி சொன்னார் ஒரு இடத்தில் நடக்கின்ற எந்தவொரு விடயமாயினும் அதற்கு ஒவ்வொரு அமெரிக்கனும் பொறுப்பு என்று. நாகா ஆத்மீக உணர்ச்சி விழிப்பு துணிவு கடமைப்பாடு உள்ளவர். அவரது வாழ்வு ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடங்கவில்லை. அவர் ஒரு வீரராவதற்குக் காரணம் பாகுபாடுகளற்ற பரந்த மனப்பான்மையென்றே கூறலாம். அவரது வழியைப் பின்பற்றுவது எமது இனத்தைப் பாதுகாக்க உதவும். இவ்வாறு திரு. கதிர் உரையாற்றினார்.

### திருமதி அமிர்தலிங்கம்

அடுத்துப் பேசிய திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் குறிப்பிட்டதாவது:—

தமிழரசுத் தலைவர்கள் அரசுக்கு பந்தம் பிடிக்கவில்லை. வீட்டிலிருந்துகொண்டு பொழுது போக்கு அரசியல் பேசுபவர்கள் இன்று இனத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியினைப் போக்க முன்வர வேண்டும். களம் சென்று போராடக்கூடியவர்களே இன்று எமது இனத்திற்குத் தேவை; அமரர் நாகா தமிழரசுக் கட்சிக்கு தாயாக விளங்கினார். காலிமுகத் திடலிலும், கச்சேரி வாயிலிலும் நின்று கொண்டு அவர் நடாத்திய போர்ப் பணியை என்னால் மறக்க முடியவில்லை; அது மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். அவர் நடமாடிய இந்தஇடத்தில் அவருக்கு அஞ்சலி செய்யக்கூடும்போது இது இனத்திற்கு ஏற்பட்ட சோதனையான நிகழ்ச்சியென்றே கூறவேண்டும்.

— வண்ணை நிருப[?] 'சண்')

## இராணுவத்தளபதியுடன் மோதியவர் நாகா

1961-ம் ஆண்டு அமரர் நாகநாதன் பாவித்துக் கொண்ட மோட்டார் காரை அன்றைய இராணுவத்தினர் அடித்து நொருக்கினார்கள். மோட்டாரின் சொந்தக்காரர் காரிலுள்ள ஒரேயொரு கண்ணாடித்துண்டை மாத்திரம் பின்னர் நாகாவிடம் காட்டி இதுவொன்றைத் தவிர மற்றவையெல்லாம் சேதப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறவே மனம் வேதனை கொண்ட நாகநாதன் அவரையும் அழைத்துக்கொண்டு கண்ணாடித் துண்டுடன் அன்றைய தளபதி உடுகமவிடம் நேரிலே சென்று, உங்களது இராணுவம் செய்த கொடுமையில் மீதியாயிருப்பது இந்தக் கண்ணாடித் துண்டுதான். இதை நீரே அடித்து நொருக்குமென்று அவர் மீது விட்டெறிந்தபோது அவர் மலைத்து விட்டாராம். யாராக இருந்தாலும் நீதிக்காக வீரத்துடன் செயல் புரிந்த, நாகாவிற்கு நிகர் நாகா ஒருவரே, அவர் இடத்தை இனி யார் நிரப்பப் போகின்றார்களென்பதுதான் அனைவரது கேள்வியுமாகும்.

—வி. தருமலிங்கம் (கோண்டாவில் கூட்டத்தில்)

## நாகா போன்ற போர் வீரர்களே தமிழினத்துக்கு இன்று தேவை!

"டாக்டர் நாகநாதன் உண்மையிலேயே துணிவும் வீரமும் உள்ளவரென்பதை ஏனையோர் அறிந்ததைவிட நான் கூடுதலாக அறிவேன். எதற்கும் அஞ்சாத கட்டுப்படாத அவர் சில சமயங்களில், தானே ஒரு கட்டுப்பாட்டிற்குள் வந்து விடுவார்.


வெளிநாட்டில் படிப்பை முடித்துக் கொண்டு திரும்பிய அவர் மீண்டும் இந்தியாவுக்கே சென்றிருந்தால் ஒரு சர்வதேசத் தலைவராகியிருக்க முடியும். அவ்வளவு பேராற்றல் நிறைந்தவர் டாக்டர் நாகா ஒருவரே. இலங்கை திரும்பியபோது தமிழினம் எல்லாவகையிலும் நெருக்கப்படுவதைக் கண்டு தனது வருவாயை எல்லாம் இனத்திற்கு வாரிவழங்கி அரும்பாடு பட்டார். தியாகம் பல புரிந்தார்.

எனது ஆரம்பகால சகாக்கள் பலரை இன்று இழந்து நின்றாலும் அவர்களது தியாகம் நிறைந்த வீரவரலாறுகளை நினைத்துப்பார்க்கும்போது இன்னும்பலவருடகாலம் எனது தாய் மொழியின் ஈடேற்றத்திற்காக அயராது உழைக்க வேண்டுமென்ற புதியதொரு தெம்பும் உணர்ச்சியும் எனக்கு ஏற்படுகின்றது. தமிழினம் இன்று சோதனையான காலகட்டத்திலிருக்கின்றது. டாக்டர் நாகாவைப் போன்ற வீரம் அஞ்சாமை நிறைந்த தீரர்களே இன்று தமிழினத்திற்குத் தேவை.

—தந்தை செல்வா (கோண்டாவில் கூட்டத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்பவை



**'நம்பிக் கெட்டான் நாகநாதன்' என்ற வாசகத்தின் மூலம் தமிழ் காங்கிரஸ் வட்டாரங்கள் எதிரொலித்த அனுதாப உணர்வுகள் படு மிலேச்சத் தனமானவை: 1952-ம் ஆண்டுத் தேர்தலைத் தொடர்ந்து திரு: பொன்னம் பலத்தின் தேர்தலை ஆட்சேபித்து வழக்குத் தொடரப்பட்டது, டொக்டரால் அல்ல, ஆதரவாளரால்: அவ் வழக்கு வெற்றிபெறவில்லை;**

ஏதோ கொழும்பில் தான் உண்டு தன்பாடுண்டு என்று அரசியலில் அக்கறையின்றியிருந்த டொக்டர் நாகநாதனை, தேர்தலில் வெற்றி பெறலாம் என்றும் பின்னர் தேர்தல் வழக்கில் வெற்றி பெறலாமென்றும் ஆசை காட்டி, போதையூட்டி அரசியலில்ஈடுபடுத்தினூற்போன்றும் முடிவில் டொக்டர் நல்ல பாடம் படித்தாரென்றும் கருத்துப்பட இக்கயமை வட்டாரங்கள் வியாக்கியானம் செய்தன:

டொக்டர் நாகநாதன் வெறும் இரத்தத்தாலும் என்புகளாலும் தசையாலும் உருவாக்கப்பட்ட சோற்றுப் பிண்டமல்லவென்பதையும், அவரது உணர்வுகளும் உழைப்பும், ஆன்மாவும், அபிலாஷைகளும் சாதாரண மனித ஆசாபாசங்களைக்கடந்தன என்பதையும், இந்நாட்டின் தமிழர் வரலாற்றில் டொக்டரின் தடங்களும் ஆழப்பதிய வேண்டுமென நிச்சயிக்கப்பட்டிருந்தன என்பதையும் இவ்வட்டாரங்கள் அறியா. உப்புக்கும் புளிக்கும் உயிரை விடுவோம் என ஓலமிட்டுக் கொண்டிருந்த இக்கூட்டத்தால் உன்னதமான இலட்சிய வெறியை அடையாளம் காண முடியவில்லை. டொக்டரோ, கேவலம், வெற்றிக்கும் தோல்விக்கும் விலைபேசியவரோ வலை வீசியவரோ அல்ல; வானமேறி வைகுண்டத்தின் வழியைத் திறக்க முயன்றவர் அவர். இதனுற்ருன், கூரையேறிக் கோணற் சுரக்காய் பறிப்பதான சாமானிய செயற்பாடுகளை யிட்டு அவர் கொக்கரிக்கவில்லை. தோல்விகளையிட்டுத் துவண்டுவிடவுமில்லை.

1952-ம் 1956-ம் ஆண்டுத் தேர்தல்களின் தோல்வியின் பின்னரும்மக்கள் மன்றத்தை விட்டு ஓடி ஒதுங்காதவர் டொக்டர். நம்படையணியின் முன்னணியில், நாடாளுமன்ற உறுப்பினராக அல்ல, வெறும் நாகநாதனாக நின்றவர்; தேர்தலில் வென்ற திரு. பொன்னம்பலத்தைக் கூட மக்கள் சக்தியால் வென்றவர்.

**அடைப்பும் திறப்பும்**

1957-ம் ஆண்டெனநினைக்கிறேன். பெப்ரவரி 4-ம் தேதியை வழக்கம்போல துக்க தினமாக அனுட்டிக்கும்படி தமிழரசுக்கட்சி வேண்டுகோள் விடுத்தது; கடையடைப்பு, கறுப்புக் கொடிகள் என்பனவற்றையும் விதித்துரைத்தது: இவை வழக்கமான அம்சங்கள் தாம் துக்கதினமொன்றின் வழக்கத்திற்கு மாறாக, கடையடைப்பு வேண்டாம், கடை திறப்பு செய்யுங்கள் என வேண்டுகோள் விடுத்தார் யாழ்ப்பாண எம். பி. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் 'பாராளுமன்றத்திலே பகைவரும் அஞ்சும் வீரன்' (இப்படித்தான் 1956-ல் அன்னாரின் தேர்தற் சுவரொட்டியில் வர்ணித்திருந்தனர்) திரு: பொன்னம்பலம் அவர்கள்.

வழக்கத்திற்கு மாறான இந்தப் புதுமையான வேண்டுகோளில் வழக்கமான அம்சம் எதுவும் இல்லாமல் இல்லை. தமிழரசுக்கட்சி எதைக் கூறுகிறதோ அதற்கு எதிர் மாறானதைக் கூறுவது என்ற திரு. பொன்னம்பலத்தின் வழக்கமான தத்துவம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது.

**களம் புக்கார்:**

அன்று தமிழரசுக்கட்சியின் வேண்டுகோளுக்கேற்ப தமிழ்பேசும் மாநிலமெங்கும் கடைகள் அடைக்கப்பட்டன. யாழ்ப்பாணம் இதனை வெற்றிகரமாகச் செய்தது. யாழ். மாநகரத்தில் பெரிய கடையில் இன்னும் அடைக்காத இரண்டொரு கடைகளையும் அடைக்குமாறு இளைஞர்களும் மாணவர்களும் வேண்டிக்கொண்டிருந்தனர். இந்த வாலிபர்களுக்குத் தலைமை தாங்கினர் டொக்டர்.

திரு: பொன்னம்பலத்தைப் பீடித்த மும்மலத்திலும் முதன்மலம் பேயாகப் பேதலித்தது; 'என்னடா நான் யாழ்ப்பாண எம்: பி: கடை திறவுங்கள் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். என்னிடம் தோற்ற நாகநாதன் கடையடையுங்கள் என்று சொல்லி யாழ் மாநகரத்தின் நடுநாயகமான பெரிய கடையிலேயே எல்லாக் கடைகளையும் அடைத்து விட்டால் இச் சேதிபத்திரிகையில் வந்தால் என்னைப்பற்றிக் கொழும்பில் என்ன நினைப்பார்கள்? என்னிடம் தோற்ற ஏனோதானோ நாகநாதன் என்னிடம் எனதுதொகுதியிலேயே வாலாட்டுவதா? பார்த்துக் கொள்கிறேன்' என்று குமுறியவாறே படப்பிடிப்பாளரையும் கூட்டிக்கொண்டு பெரிய கடை நோக்கித் தமது பரிவாரம் புடைசூழ காரில் புறப்பட்டார் திரு. பொன்னம்பலம். புறப்படுமுன் பெரியகடையில் தமது ஆதரவாளர்களான வர்த்தகப் பெரும்புள்ளிகளுக்கு தொலைபேசியில் பேசிவிட்டுச் சென்றார்போலும் ஏனெனில் அந் நேரம் பெரியகடையில் பூட்டப்பட்டிருந்த தமது கடை-

## 4 தேர்தலில் தோற்றார் வென்றார்!

களிற் சிலவற்றைத் திறப்பதற்கு பெருவணிகர் சிலர் முயன்றதுண்டு எனினும், டொக்டர் அம்முயற்சியை இளைஞரின் துணையுடன் முறியடித்துவிட்டார்.

யாழ்ப்பாண எம்: பி. வந்திறங்கியபோது பெரியகடையில் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் உணர்ச்சிப் பிழம்பாக நிற்பதைக் கண்டார்! குருஷேத்திர யுத்தத்தில் குதித்துவிட்டான்வீரன், குறையேது இனி என்ற குதூகலத்தை தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர் அணியில் காணக்கிடந்தது: எனினும் கடைகளனைத்தும் அடைக்கப்பட்டிருந்த காட்சியையும் டொக்டர் அங்கு வெற்றித் திருமகனாக நின்ற காட்சியையும் கண்ட தமிழ் காங்கிரஸ் தலைவர் முகத்தில் ஈயாடவில்லை. ஆனாலும் சளைப்பாரா? வெற்றியைக் குத்தகைக் கொடுத்த வர்க்கத்தின் பிரதிநிதியல்லவா?

**சம்போ சங்கரா!**

தமது ஆதரவாளர் சிலரின் கடைகளைத் திறக்க முயன்றார். ஆதரவாளரும் ஐயாவை வரவேற்கத் தயாராயிருந்தனர். ஆணைவிடுத்தார் டொக்டர்: அது கேட்டு வாலிபப்படையினர் வாயிலை அடைத்துக் கொண்டனர்: ஐயாவால் கடையைக்கூட நண்ண முடியவில்லை. அன்னாரின் ஆதரவாளர்களின் சண்டித்தனங்களும் வாலிபர்களிடம் விலைபோக மறுத்தன. ஐயா பொலிசாரிடம் 'இங்கிலிஸ்' பேசினார்? கைப்பிரம்பைச் சுழற்றிக் காட்டினார், விழியை உருட்டினார் மிரட்டினார். இருப்பினும் என்ன? எடுபடவில்லை.

'தம்பிகும்பகர்ணு! பாரடா இந்த அநியாயத்தை என்று சொல்லாத குறையாக தமது குபேர சம்பத்துமிக்க தீவிர ஆதரவாளரான சங்கரப்பிள்ளை கடை வாயிலை நோக்கி தமது அணியினரும் படப்பிடிப்பாளரும் புடைசூழ நடந்தார்: திறந்த கதவுடன் ஒரு கடையையாவது படம் பிடித்து மறுநாள் தமது திருநாமத்தை அர்ச்சிக்கின்ற தினசரி எதிலாவது வெளியிடச்செய்து கொழும்பில் தமது பெருமையையும் யாழ்ப்பாணத்தில் தமது உரிமையையும் நிலைநாட்டிக் கொள்வதே ஐயாவின் திட்டம் ஆனுனப்பட்ட இராணுவத் திட்டங்களையே 1961ல் மோந்து தவிடுபொடியாக்கிய டொக்டருக்கு ஐயாவின் சில்லறைப் புத்திகள் பிடிப

**கரிகாலன்**

டாதா என்ன? வாலிபருடன் கடைவாயிலைத் திறக்க முடியாதபடி அடைத்துக்கொண்டார். கதவைத் திறந்து தம் தலைவர் பெயரைக் காப்பாற்றக் கடை முகாமையாளர் முயன்றனர். திறந்த கதவின் திவ்விய தரிசனத்தைப் புகைப்படத்திலே பதிய வைப்பதற்காக மிகவும் சிறுபிள்ளைத்தனமாக புகைப் படக்காரரை இங்குமங்கும் ஏவிக்கொண்டிருந்தார் த. கா. தலைவர்.

**நாகா! நாகா!:**

பயமாகக்பேசிபணிய வைக்க முடியாத டொக்டரை நயமாகப் பேசி மடக்கப் பார்க்கிறார். "நாகா! நாகா!" என்று அழைத்து ஆங்கிலத்தில் ஏதோகூறமுற்படுகிறார். செவிமடுக்க மறுத்த டொக்டர் கொச்சைத் தமிழில் குமுறுகிறார். "பொன்னம்பலம்! நீ தமிழர்களை இனியும் ஏமாத்த முடியாது." ஆயிரக்கணக்கான இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டு நின்ற அவ்வேளையில், ஒழுங்கை நிலை நாட்டப் பொலிசார் தலையிடவும் ஏற்பட்ட இழுபறியில் த: கா. தலைவரும் ஒருபுறம் தள்ளப்படுகிறார். யாழ்ப்பாண எம். பி. யாழ்ப்பாணத்தின் நடுமையத்திலேயே அவமானப்பட்டுப் பின்வாங்கி வெளியேறவும், அவரிடம் தேர்தலில் தோற்ற நாகநாதன் நினைத்ததைச்சாதித்துவிட்டு வெற்றி வீரனாக நடைபோடவும் கண்ட காட்சி மிகவும் முரணான நிகழ்வாகும்.

**சில்லறைத்தனம்:**

டொக்டரின் வெற்றி தோல்விகளை இயல்பாகவே எனது வெற்றி தோல்விகளாகக் கணிக்கப் பழகிக் கொண்டது என் மனம். அன்று டொக்டரின் எழுச்சி கண்டு இறும்பூதெய்தினேனாயினும், த. கா. தலைவருக்கு ஏற்பட்ட அவமானம் எனக்கு உற்சாகத்தைத் தரவில்லை. என்னையறியாமல் ஏதோ பச்சாத்தாப உணர்வு நெஞ்சின் அடித்தளத்திலே அழுந்திக் கொண்டிருந்தது: த. கா. தலைவரின் வயதிற்கும் அனுபவத்திற்கும், அவர் சூனியப் பெருவெளியிலே கட்டியெழுப்பியதம் அரசியல் வாழ்வின் பிராணவாயுவாகச் சுவாசித்துக் கொண்டிருந்த புகழுக்கும், இவ்வாறு சில்லறைத்தனமாக நடந்து அவமானப் பட்டிருக்கக் கூடாது. கோகர்ணம், கஜகர்ணம் எல்லாம் அடிக்கத் தெரிந்தவர் என்ற பெயரைத் தம் ஆதரவாளர் மத்தியில் நிலைநாட்டிவிட்டு, சாதாரண குத்துக்கரணம் ஒன்றை அடிக்கமுற்பட்டதே தவறு; அதையும் ஒழுங்காக அடித்துப் பெயரைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாது போன பேதமையை நினைத்துப் பச்சாதாபப்பட்டேன்.

அன்றுமாலை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற துக்கதினக் கூட்டத்தில் பேச எழுந்த வித்துவான் வேலன் கூறிய முதல் வசனம் அன்று த. கா. தலைவர் உற்ற அவமானத்தை இரத்தினச் சுருக்கமாக விளக்கிற்று. "எங்கள் பலம் பொன்னம்பலம் என்ற நிலைமாறி இன்று எங்கள் மலம் பொன்னம்பலம் என்ற நிலை வந்து விட்டது" என்றார்: (வித்துவான் வேலனின் இலட்சிய பலம் எத்தன்மையது என்பது இன்னொரு விஷயம்; பலரும் அறிந்த விஷயம் தான்.)

**டொக்டரின் பீடிகை**

சட்டத்துறையில் கலை கட்டி நிற்கும் திரு. பொன்னம்பலம் அரசியற் துறையில் கலையற்றவராக இருப்பதேன்? என்று டொக்டரிடமே ஒரு நாள் கேட்டு வைத்தேன். நான் கேட்டது தேர்தல் வெற்றி தோல்விகளைப் பற்றியல்ல, பொது மக்கள் மத்தியிலான சாதாரண அரசியற் பொலிவைப் பற்றியே. டொக்டரின் மறுமொழி முதலில் மிகவும் சாதாரணமாகவே தோற்றியது. 'Because he has no sense of humour' (அவருக்கு நகைச்சுவை உணர்வு இல்லாததேகாரணம்) என்றார். பின், மீளாய்வின்போது இது கனமான கணிப்பீடாகவே பட்டது. தமது கருத்தை நிறுவுவதற்கு ஆதாரமாகச் சில சம்பவங்களை விவரித்தார் டொக்டர். 'அமைச்சரின் தொடையில் கை போடக்கூடாது என்றேன். அவருக்குக் கோபம் வந்துவிட்டது' என்ற பீடிகையுடன் தொடங்கினார். டொக்டர் மிகவும் நகைச்சுவை கலந்து பேசுவார். மிதமிஞ்சிய நகையுணர்வு மிக்கவர் அவர். அன்னாரது அரசியல் வாழ்வின் வெற்றி தோல்விகளையும் விலக்கிக் கொண்டு, அவர் கலையுடனும் கலகலப்புடனும் விளங்கியமைக்கு இதுவே அடிப்படைக் காரணம் என்பேன்.

டொக்டரின் பீடிகை மேற்கொண்டு என்னத்தைச் சொல்வாரோ என்றொரு கூச்சத்தை ஏற்படுத்தியது. டொக்டர் மேலே தொடர்ந்தார். அவர் கூறியதை அடுத்தவாரம் எழுதுவேன்.

(வளரும்)

## வீணன் நீயே!

—சோமலிங்கம்—

எழுதுகிறாய் நண்பா! நீ எழுதுகின்றாய்
என்ன சொல்லி நாளெல்லாம் எழுதுகின்றாய்?
தொழுது தமிழ்த் துரோகிகளைத் துதிகள்பாடி
சுரணைஅற்ற சொறிநாய்போல் சோற்றுக்காக
எழுதுவதால் உமக்குத்தான் எச்சில் கிட்டும்
எட்டப்பர் பரம்பரையின் இறுதி ஆள்நீ
தொழுதுண்டு விழுவதுதான் உமக்குத் தொண்டு
சுதந்திரத்தைத் தேடுதல்தான் எமக்குப் பண்பு.

உன்போன்றோர் தமிழரசுக் கட்சிதன்னை
ஊளையிட்டுப் பார்ப்பதனால் என்ன உண்டு?
கண்போன்ற தமிழனை கட்சி தன்னை
கடைசிமட்டும் கவிழ்ப்பதற்கும் விடவும் மாட்டாள்
தின்பதற்கும் குடிப்பதற்கும் உன்போல் நாங்கள்
சேரவில்லை தமிழரசுக் கட்சி தன்னில்
மண்தன்னில் தமிழனை மானத்தோடு
வாழ்வதற்கு உயிர் கொடுக்கச் சேர்ந்தோர் நாங்கள்.

ஆரியர்கள் வருகை தொட்டு இன்று மட்டும்
அழிப்பதற்கு உம்போன்ற நன்றி கெட்ட
பூரியர்கள் இருந்துதான் என்ன கண்டார்?
பொசுக்கித்தான் விட்டனரா தமிழை? வைகை
நீரினிலும் நெருப்பினிலும் வளர்ந்த பாவை
நெடுங்காலம் இளமையுடன் விளங்கும் கன்னி
வேரோடு சாய்வதற்குக் கச்சை கட்டும்
வீணருக்கு வால் பிடிக்கும் வீணன் நீயே!

## வாசகர்களுக்கு

சில எதிர்பாராத வசதியீனங்களால் இவ்விதழ் 10 பக்கங்களில் வெளிவருகிறது. அடுத்த இதழ் வழமைபோல 12 பக்கங்களில் வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

| நிர்வாகி·

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயும் மருந்தும்

அன்பு நண்பா,

''சட்டத்தை மீறும்படி நான் இதுவரை போதித்திடவில்லை; அப்படிப் போதித்திட வேண்டிய அவசியம் இனிமேல் ஏற்படக் கூடும். ஒரு கிறிஸ்தவன் என்ற முறையில் நான் சட்டத்துக்கு பணிந்து நடப்பேன். அரசாங்கத்திற்கு வரி செலுத்திட வேண்டியது எனது கடமை; ஆனால் சில சமயங்களில் அச்சட்டத்தை மீற நேரிடும். உதாரணமாக நாஜிஜெர்மனியில் யூதர்கள் பற்றி தகவல் தெரிவித்திடவேண்டுமென மக்கள் கோரப்பட்டனர். இதுபோன்றசட்டங்கள் மீறப்படவேண்டியவை. இன்னொரு உதாரணத்தையும் சொல்கிறேன். ஒரு கறுப்பரின் சமயச்சடங்குகளில் கலந்துகொள்ளும் படி எனக்கு அழைப்பு வருகிறது. இதில் கலந்துகொள்வதற்கு நான் அரசாங்க அனுமதிபெற வேண்டுமென சட்டம் கூறினல், அந்தச் சட்டத்தை மதிக்காமல் நான் கலந்து கொள்வேன்.''

—இன ஒதுக்கல், இனப்பாரபட்சம், நிறவெறிபோன்ற காட்டுமிராண்டித்தனங்களுக்கு பெயர் பெற்ற தென்னுபிரிக்க நாட்டிலிருந்து மேற்கண்ட உறுதிமிக்க குரல் எழுந்திருக்கிறது —அதுவும் தென் ஆபிரிக்க உயர் நீதி மன்றத்தில்!

தெளிந்த—உறுதிமிக்க—வைராக்கியமான மேற்கண்ட கருத்தினை நீதி மன்றத்தில் வெளியிட்டிருப்பவர் ஓர் ஆங்கிலேயர்! கிறிஸ்தவப் பாதிரியார்! பெயர் வண. பெய்டாக்! 59வயது நிரம்பிய இந்தப் பாதிரியாரின் தலை முடி நரைத்து விட்டாலும் உள்ளம் தளர்ந்திடவில்லை; உடல் தளர்ந்திடினும் ஏற்றுக்கொண்ட இலட்சியம் சிறிதும் தளர்ந்திடவில்லை!

ஆம் நண்பா, அஞ்சாநெஞ்சினர் இவர்; விளைவுகளை நோக்காது கடமைதனை ஆற்றிட வேண்டும் என்கின்ற உறுதிமிக்கவர்; அநாகரீக அரசியலை—இன ஒதுக்கலை—வெறுப்பவர்; கறுப்பர், வெள்ளையர் என்கின்ற நிறவெறியை கடுமையாக எதிர்ப்பவர்; இத்தகைய மனிதத் தன்மை நிறைந்த வரை விட்டு வைத்திடுவார்களா தென்னுபிரிக்க மிலேச்ச புரியினர்! அண்ணல் காந்தியாரையே 'கறுப்பர்' என்று காரணம் காட்டி கொடுமைப்படுத்திய வரலாறு கொண்ட நாடன்றோ தென்னுபிரிக்கா! விட்டு விடுமா ஒரு பாதிரியார்—அதுவும் ஓர் ஆங்கிலேயர் இனவெறி, நிறவெறியின் எதிரியாக மாறி ஆட்சி பீடத்துக்கு எதிராக இயக்கம் நடத்திடுவதை! கைது செய்து அடைத்தது காராக்கிருகத்துள்! சுமத்திற்று பாரதூரமான குற்றச்சாட்டினை! என்ன குற்றச்சாட்டு தெரியுமா நண்பா, தென்னுபிரிக்க அரசாங்கத்தை கவிழ்த்திடுதற்கு சதி செய்தார் பெய்டாக் என்பதுதான்! இவர் மீது வழக்கு விசாரணை நடைபெற்றபோதே சிறிதும் கலங்கிடாமல் துணிச்சலுடன் தன் கருத்தினை மேற்கண்டவாறு எடுத்துரைத்திட்டார் பெய்டாக் பாதிரியார்!

இன ஒதுக்கல், இனப்பாரபட்சம், இன ஒழிப்பு—நிற பேதம் போன்ற மிலேச்சத்தனங்களை ஆதாரமாகக் கொண்டு கட்டப்பட்டது தானே தென்னுபிரிக்க ஆட்சிப்பீடம்! ஆகவே நிற வெறிக்கு, இன வெறிக்கு எதிராக பெய்டாக் பாதிரியார் வேட்டு வைக்கிறர் என்றல் அது தென்னுபிரிக்க ஆட்சிப்பீடத்துக்கு வைக்கப்படும் வேட்டு என்பதும் ஓரளவில் பொருத்தமானதுதான்!

இலட்சியவாதிகள் மீது—கொள்கை வீரர்கள் மீது—அடக்குமுறைகள் அள்ளி வீசப்படுவதும் — பொய் வழக்குகள் போடப்படுவதும் கடூழிய சிறைத் தண்டனையோ மரண தண்டனையோ, ஆயுள் தண்டனையோ வழங்கப்படுவதும் வரலாற்றில் ஒன்றும் புதுமையானதல்ல! ஆனல் அவர்கள் எந்த இலட்சியங்களுக்காக போராடினர்களோ — எந்த இலட்சியங்களுக்காக தங்கள் இன்னுயிரை இழக்கிறர்களோ —அந்த இலட்சியங்கள் அவர்களது தியாகம் என்ற எருவைப் பயன்படுத்தி வளர்ந்தோங்கி வெற்றி பெற்றுள்ளதையும் வரலாறு எடுத்துரைக்கின்றது நமக்கு!

அந்த முறையில் நண்பா, பெய்டாக் பாதிரியார் மீது தென்னுபிரிக்க உயர் நீதி மன்றம் என்ன தண்டனை விதித்திடினும் அவர் ஏற்றுக்கொண்ட உன்னத இலட்சியம் ஓர் நாள் வெற்றிபெறும் என்பதனை யார்தான் மறுத்திட முடியும்?

நண்பா, சட்டங்கள் என்பன மனிதனுக்காக மனிதனல் இயற்றப்படுபவைதான். நாகரீகமான சட்டங்களுக்கு எப்படி மனிதன் கட்டுப்பட வேண்டுமோ அதேபோல அநாகரீகமான சட்டங்களுக்கு கட்டுப்பட மறுத்திட வேண்டியதும் மனிதனது தலையாய கடமையாகும்!

ஒரு சாதிக்கும் இன்னேர் சாதிக்கும் பாகுபாடுகாட்டிடும் சட்டங்களும், ஓர்இனத்துக்கும் இன்னேர் இனத்துக்குமிடையே வேறுபாடு காட்டிடும் சட்டங்களும், ஒரு நாட்டில் வாழுகின்ற ஒரு மொழி பேசும் மக்களுக்கும் மற்றேர் மொழி பேசும் மக்களுக்குமிடையே பேதம் காட்டிடும் சட்டங்களும், அதே போல கறுப்பர் வெள்ளையர் என்று நிற மத பேதம் காட்டுகிற சட்டங்களும் நிச்சயம் மனிதாபிமானமுள்ளவர்களால் எதிர்க்கப்படவேண்டிய சட்டங்களே! நியாயமான சட்டங்களுக்கு தலைவணங்க வேண்டியதும் அநீதியான சட்டங்களை புறக்கணித்து எதிர்த்திட வேண்டியதும் மக்களின் நீங்காக் கடமையன்றோ!

இத்தகைய இனபேதம், மொழி பேதம், காட்டுகிற சட்டங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் விடுதலைக் கிளர்ச்சியும் உரிமைப் போராட்டங்களும் இருந்து கொண்டேயிருந்திடும்! அத்தகையச் சட்டங்கள் ஒழித்துக்கட்டப்படும்வரை அச்சட்டங்களால் பாதிக்கப்படக்கூடிய மக்கள் ஓய்ந்து போகமாட்டார்கள்!

இன பேதம் காட்டுகிற சட்டங்கள் தென்னுபிரிக்காவில்தானு? ஏன் இங்கென்னவாழ்கிறதாம் என்று கேட்டிடுவாய்; உண்மைதான்; அதனுல்தானே அவற்றுக்கு எதிராக நாம் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக இயக்கம் நடாத்தி வருகிறேம்; இன்னல்களையும், சிறை வேதனைகளையும், அடக்குமுறைகளையும் ஏற்றுக்கொண்டு வருகிறேம்!

"தென் ஆபிரிக்கா, ரொடீசியா போன்ற நாடுகளில் நடைபெறும் இன ஒதுக்கல்களைக் கண்டித்திடும் இலங்கை அரசாங்கம் நமது நாட்டிலேயே ஒரு இனத்தை அடக்கி யொடுக்கி அவர்களில் ஒரு பகுதியினரை நாடற்றவர்களாக்கியும் வைத்துள்ளது. இந்நாடு ரொடீசியாவைவிட இன ஒதுக்கலில் ஒரு படி முன்னேறிவிட்டது''

என்று அண்மையில் மூதவையில் மலையகப் பிரமுகரான எஸ். யேசுதாசன் சுமத்திய கடுமையான குற்றச்சாட்டினை மூதவையிலிருந்த எந்த ஒரு ஆளுங்கட்சிப் பிரதிநிதியாவது மறுத்

## அரசியல் மேடை

துரைத்திடவில்லையே! மறுத்துரைத்திடுதற்கு உள்ளத்தில் ஒளியல்லவா இருந்திட வேண்டும்?

காடாகக்கிடந்த மலைநாட்டை, தங்கள் உடலையும் உயிரையும் கொடுத்து செல்வச் செழிப்புமிக்க நாடாக மாற்றியமைத்து இலங்கையை குபேரபுரி என்று வேற்று நாடுகள் சொல்லத்தக்க நிலையை ஏற்படுத்தி வைத்த பத்து இலட்சம் தமிழ்த் தொழிலாளர்களின் குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவராக்கிய 1948ம் ஆண்டின் இலங்கை குடியுரிமை, வாக்குரிமைச் சட்டங்கள் இன ஒதுக்கல் சட்டங்கள் அன்றி வேறென்ன? இந்தப் பத்து இலட்சம் தொழிலாளர்களும் தமிழர்களாக இருந்த காரணத்தினுல்தானே அவர்களது உரிமைகள் பறிக்கப்பட்டன!

ஈழத் தமிழினத்தின் பாரம்பரியத்தாயகமாம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கமே திட்டமிட்டு வேற்றினத்தாரைப் பெருமளவில் கொண்டு வந்து குடியேற்றி தமிழ் நிலத்தை அபகரித்திடுவது—ஆக்கிரமித்திடுவது—அப்பட்டமான இன ஒழிப்பு நடவடிக்கையன்றி வேறென்ன?

தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமையைப் பறித்து, அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கியுள்ள— அடிமைகளாக்கியுள்ள —சிங்களம் மட்டும் சட்டத்தினை விட இன ஒதுக்கல் சட்டத்துக்கு வேறு தகுந்த உதாரணம் காட்டிட முடியுமா?

சிங்கள அரச ஊழியர்களுக்கு இல்லாத சுமையை தமிழ் ஊழியர்கள் மீது சுமத்தி—சிங்களத் தேர்ச்சிபெற்றுல்தான் உமக்கு ஊதிய உயர்வு; பதவி நிச்சயம் என்று கட்டளை போடுவதும் சிங்கள மொழி தேர்ச்சியில்லாத காரணத்தினுல் அவர்களுக்கு சீட்டுக்கிழித்திடுவதும் இனப்பாகுபாடு அன்றி வேறு என்ன?

பல்கலைக் கழகத்தினுள் நுழைந்திடுவதற்கு தமிழ் மாணவர்கள் மட்டும் அதிக புள்ளிகள் எடுத்திடவேண்டும்; வேற்றின மாணவர்கள் தமிழ் மாணவர்களைவிட குறைவான புள்ளிகள் எடுத்தால் போதும்; என்று கல்வி வழங்கிடுவதிலும் 'தரப்படுத்தல்' என்னும் போர்வையின் கீழ் இனப்படுத்தல் நடைபெறுவது அப்பட்டமான இன ஒதுக்கல் அன்றி வேறென்ன?

கிறித்துவம், சைவம், இஸ்லாம் ஆகிய மதங்களுக்கு இல்லாத சலுகைகளையும் உரிமைகளையும், பௌத்தத்துக்கு மட்டும் வழங்கிடுவதை மதப்பாகுபாடு என்று அழைப்பதன்றி வேறு எப்பெயர் கொண்டு அழைத்திடுவது?

[illegible] ஒற்றையாட்சி [illegible] இனபேதம் காட்டுகிற ஓர் அரசியல் அமைப்புத்தான்! பெரும்பான்மை இனத்தை நிரந்தர ஆளும் இனமாகவும், சிறுபான்மை இனத்தை ஆளப்படும் நிரந்தர அடிமை இனமாகவும் ஆக்கிவைத்திருப்பது ஒற்றையாட்சி அரசியலமைப்பு! தமிழினத்தின் தலைவிதியை நிர்ணயித்திடும் பொறுப்பை சிங்கள இனத்தின் கைகளில் தந்திருப்பதும் ஒற்றையாட்சி அரசியலமைப்புத்தான்!

இந்நாட்டில் உருவாக்கப்படும் இனப் பாகுபாடு காட்டும் சட்டங்களுக்கெல்லாம் மூலவேராக—இன ஒதுக்கல் நடைபெறுவதற்கு ஆதாரமாக—தமிழினத்தின் குரல் வளையை நெரிப்பதற்கு பெரும்பான்மை இனத்தினரின் கரங்களுக்கு வலுவூட்டும் சக்தியாக—தமிழ் இனத்தைப்பீடித்துள்ள அரசியல் நோயின் மூல காரணமாக இருந்திடுவது ஒற்றையாட்சி அரசியலமைப்புத்தான்!

எனவேதான் நண்பா, ஒற்றையாட்சி அரசியலமைப்பினை ஒழித்துக்கட்டி ஓர் இணைப்பரசின் கீழ் ஈழத் தமிழ் நாட்டில் மாநில சுயாட்சி நிறுவினுல் மட்டுமே தமிழினம் இந்நாட்டில் தப்பிப்பிழைத்திட முடியும் என்று நாம் உறுதியாக நம்புகிறேம். இதுவே தமிழினத்திற்கு ஏற்பட்டுள்ள பிணி தீர்க்கும் மாமருந்து என்று நாங்கள் கருதுகிறேம்; அதற்காகவே உழைத்துவருகிறது நமது இயக்கம்! நாம் காட்டும் இந்தத் துல்லியமான—தெளிவான—உறுதியான பாதைக்குத்தான், நம்மை இன்று எதிர்த்திடும் தமிழர்களும் ஒரு நாள் வந்து சேர்ந்திடுவர் என்பது நிச்சயத்திலும் நிச்சயம்!

நண்பா, கம்யூனிஸ்ட் தோழர் வி. பொன்னம்பலம் அண்மையில் ரஷியா சென்று 'நோய்' மாற்றித்திரும்பினுரல்லவா? ஆனுலும் அரசியலில் அவரைப் பீடித்திருந்த நோய் இன்னும் சரியாகத் தீர்ந்திடவில்லையென்பதை 20.9.71 ஈழநாடு இதழுக்கு அவர் அளித்திட்ட பேட்டியொன்று எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. பழையபல்லவியையே மீண்டும் பாடியிருக்கிறர்; இதோபடி!

''சோவியத்யூனியனில் ஆளும் வர்க்கம் தொழிலாளி விவசாயிகளாக இருப்பதால் அங்கு இனபேதத்துக்கு இடமில்லை; அதை ஒத்த நிலையில் நமது நாடும் அரசியல் பரிணும கட்டத்தை அடைந்தால் எமது நாட்டிலும் ஒரு சமதர்ம சமூகத்தில் சுயாட்சியும் சமத்துவமும் இனங்களுக்கு கிட்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்—''

என்கிறர் வி. பி.!

இலங்கையில் ''ஆளும் வர்க்கம்'' மாறி—அதாவது ஆளுவோர் தொழிலாளி —விவசாயிகளாக மாறி நமது நாடும் அரசியல் பரிணும வளர்ச்சியடைந்திடும் வரை தமிழினம் சுயாட்சி கோரக்கூடாது; இன பேதங்களை எதிர்த்திடக்கூடாது; எல்லாவற்றையும் ஜீரணித்துக்கொண்டு அடிமைகளாக—ஆமைகளாக, ஊமைகளாக அடங்கி ஒடுங்கிக் கிடந்திடவேண்டும் என்பது வி. பி. யின் வாதம்!

தோழர் வி. பி கனவு காணும் அரசியல் பரிணும வளர்ச்சி இங்கு ஏற்படும் வரைநாம் அமைதியாக இருந்தால்—நமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக போராடாமல் இருந்தால் தமிழினமே இந்நாட்டில் அழிந்தொழிந்து சிதைந்து காலப்போக்கில் ''பரிணும வளர்ச்சி'' கண்டு வேறேர் கலப்பு இனமாக உருமாறி விடும் என்பதை நாம் புரிந்துகொண்டிடவேண்டும். அந்நேரத்தில் தமிழினம் என்றேர் தனியினம் தனியான பிரதேசத்தில் வாழ்ந்துகொண்டிருந்தால் அல்லவா சுயாட்சி கோரிக்கை எழ முடியும்?

சமஷ்டிக் குடியரசுகளாகப் பிரகடனப்படுத்திப் பல்வேறு இனங்களுக்கும் முதலில் அரசு உரிமை வழங்கி விட்ட பின்னரே, ரஷியா யூகோசிலேவியா போன்ற நாடுகள் சோசலிசத்தை நோக்கி சீரான நடைபோடுகின்றன. இது கம்யூனிஸ்ட் நாடுகளின் வரலாறு! இந்த வரலாற்றினை தோழர் வி. பீ.யால் மூடிமறைத்திட முடியாது!

தனியே சோசலிசமோ, கம்யூனிசமோ, தொழிலாளர் — விவசாயிகள் வர்க்க ஆட்சியோ இனப்பிரச்சினைக்கு பரிகார மாகாது; சமஷ்டியரசமைப்பே அதற்குரிய ஓரேபரிகாரம் என்பதை கம்யூனிஸ்ட் நாடான செக்கோசிலவேக்கியா சில ஆண்டுகளுக்குமுன் நிரூபித்துக் காட்டியது! செக்கோசிலவோக்கிய நாட்டில் கம்யூனிசம் ஏற்பட்ட பின்னரும்—அதாவது தோழர் வி. பி. கூறும் விவசாயிகள்—தொழிலாளிகள் வர்க்க ஆட்சி ஏற்பட்ட பின்னரும்—20ஆண்டுகள் தீராமலிருந்து வந்த இனப்பிரச்சினை இறுதியில் சமஷ்டி அரசமைப்பு மூலம் சிலோவக் இனத்துக்கு சுயாட்சி வழங்கியே தீர்க்கப்பட்டதென்பதை தோழர் வி. பீ. மறுத்திடுவாரா?

அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் (15)

பிரபஞ்சத்தில் இயற்கையின் தோற்றங்களுக்கும், அதன் உற்பத்திகளுக்கும், அவற்றிற்கும் இயற்கைக்குமிடையேயுள்ள பிணைப்புக்களுக்கும் கர்த்தாவாக இருக்கும் ஒரு சக்திதான் தெய்வம் என்றும், அந்த அருவ சக்தியே அண்ட சராசரம் எல்லாம் நிறைந்து நிற்கின்றது என்றும் கூறுகின்றனர் அறிஞர்கள். அந்தப் பெயரைக்கொண்டே பெண்ணையும் 'சக்தி' என அழைக்கின்றனர். ஆனால் அவளுள் எழும் அந்த அற்புத சக்தியின் விநோதரசவாத வித்தைகளை வர்ணிக்க எந்த எழுத்தாளனாலும்முடியாது. அப்படியிருக்கும் பொழுது ரகுராமனால் மட்டும் அறிந்து கொள்ளமுடியுமா? என்ன!-

படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் ரகுராமன். அவன் மனம் அந்த ஒரு நாளிலேயே அவளிடம் ஒன்றாகக் கலந்துவிட்டது. 'பானு அழகான பெண் மட்டுமல்ல. அவளுடைய அபூர்வமான உணர்வுகளும் அழகுள்ளவை தான்; தொட்டால் துவண்டு விடும் கொடிபோன்ற மென்மை. செழுமையான உடல்; கடித்துத் தின்ன வேண்டும்போல் தோன்றும் பல்வரிசை; தேன் பசை ஏறிய முள் முருக்கம் பூவிதழ் போன்ற அழகு இதழ்களில் புன்னகை மலர அவள் பார்க்கும் அந்தப் பார்வையும்...' ரகுராமனின் உடலின் ஒவ்வொரு அணுவிலும் அவள் நிறைந்திருந்தாள். கற்பனையில் அனுபவிக்கும் இன்பம் மனம் போனபடி போகும் காட்டாற்று வெள்ளம் போன்றதுதானே... அவன் சிந்தனைகளும் காட்டாற்று வெள்ளம் போன்று அணையின்றிப் புரண்டுகொண்டிருந்தது.

அந்த வேளையில் தான் தொலைபேசி மணி ஒலித்தது. அதுபற்றி எதுவித சிந்தனையுமின்றிக் கிடந்தான் ரகு. அண்ணா! போன் உங்களுக்குத்தான்' என்று பாரதி அழைத்தபோதுதான் எழுந்து ஓடி வந்தான்.

"ஹலோ! ரகு ஸ்பீக்கிங்' என்றவன் பின்பு எதுவுமே கூருமல், 'ஜேஸ் ஜேஸ்' என்று கூறிக்கொண்டே வந்தவன், 'சந்தோஷமான செய்திதான். எட்லின் தானே? அவள் எனக்காக எதுவும் செய்வாள்.' என்று கூறிப் போனை வைத்துவிட்டுத் திரும்பினான்; அவனையே பார்த்தபடி நின்றிருந்தாள் அன்னபூரணி அம்மாள்.

'அம்மா! நீங்களின்னும் தூங்கவில்லையா?' என்றான் ரகு;

'நான் தூங்குவன்: விடுவன் ஆனால் நீ இனியாவது அந்தக் கழுதைகளோடு மேயிறதைக் கைவிடடா ரகு. அந்தப் பெண்ணைப் பாரடா! மகாலட்சுமி மாதிரி இருக்கிறாள். அவளைப் பார்த்த கண்ணாலே வேறு பெண்ணைப் பார்க்க மனம் தான் வருமாடா ரகு! அது யாருடா பேசினது' என்றாள்;

"அம்மா! வந்து...ஒரு..."

'சொல்லடா: எந்தத் தேவடியாள் உன்னை இந்த நேரத்திலே...'

'அம்மா! அது பெண் இல்லையம்மா: வேணுமானால் அவனையே கேளுங்கள்' என்று பாரதியைச் சாட்சிக்கு அழைத்தான்;

அந்த விவகாரம் அத்துடன் முடிந்துவிடவில்லை. பானுவைப் பற்றி அன்னபூரணியம்மாள் கதை கதையாகக் கூறினாள். அதுமட்டுமல்ல. பாரதியின் கணவன் அடுத்தவாரம் வந்ததும் உடனேயே திருமணத்தை முடித்துவிடவேண்டும் என்றும் கூறினாள்.

அதே வேளையில் பானுமதி கனவுலகில் மிதந்துகொண்டிருந்தாள். கனவு என்றால் தூக்கத்தில் காணும் கனவல்ல. தூக்கத்துக்கும்—தூக்கமின்மைக்கும், விழிப்புக்கும்—விழிப்பின்மைக்கும் இடையே ஏற்படும் ஒருவிதமான நிலை. அன்று மாலையில் ரகுராமன் பாக்கட்டிலிருந்து எடுத்துக்காட்டிய அழகிய சங்கிலி அவள் கழுத்தைத் தழுவியிருந்தது: அவனே அவள் கழுத்தை வளைத்துப் பிடித்துக்கொண்டிருப்பது போன்ற ஓர் சுகானந்த கிறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்; அந்தச் சங்கிலியால் கோத்திருந்த கண்ணன் படம் பொறித்த பதக்கம் அவள் நெஞ்சோடு நெஞ்சாய் இதயத்தைத் தொட்டுக்கொண்டிருந்தது. இதைவிட அவள் கனவு மயக்கத்துக்குக் காரணம் எதுவும் தேவையில்லையல்லவா;

காரணம் எதுவும் இல்லாவிட்டாலும் கடந்துபோன நிகழ்ச்சிகளை நினைக்கும் பொழுது அதுகூட ஒருவகை இன்பத்தின் நெகிழ்வை அவள் இதயத்தில் ஏற்படுத்தியது. மீண்டும் அன்றுமாலை அவன் அறையில் நடந்த நிகழ்ச்சி நிழலாக அவள் மனதில் விரிந்தது;

'இது அழகாக இருக்கின்றதா பானு?' என்று அவளைப் பார்த்துக் கேட்கும் பொழுது அவனுடைய விழிகளில் தேங்கி நிற்கும் ஆர்வத்தையும் பார்த்துப் புன்

நமது தொடர்கதை

முறுவல் செய்தாள் பானுமதி.

'ஏன் கேட்கின்றீர்கள் ரகு?'

'காரணத்தோடுதான் கேட்கின்றேன்.'

'உங்களை விடவா இது அழகு?'

'என் அழகைப் புகழ்வதால் நான் மயங்கிவிடமாட்டேன் ஆனால் காலையில் நீ பார்த்த 'றிஸ்ட்வாட்சை' விட இது அழகா பானு?'

'ரகு! இது... இது...'

'இதுவா?இது என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட திருடிக்குத் தான் ஆனால் பரிசுகளைக் கொடுத்து அன்பைப் பெறும் ஏமாற்றுவித்தை செய்பவனல்ல நான். ஆனாலும் நீ காலையில் அந்த 'றிஸ்ட்வாட்சை! என்னிடமிருந்து எதிர்பார்த்தாய். அது உனக்கு ஒரு ஏமாற்றமாகத் தான் இருந்திருக்கும். அதைத் தவிர்க்கவே இதை வாங்கி வந்தேன்' என்றான்;

'ரகு நான் நினைப்பதையெல்லாம் கூறிவிடுகின்றீர்களே? என்ன மந்திரவித்தை கற்றிருக்கின்றீர்கள்?'

'பானு! மந்திரமுமில்லை, தந்திரமுமில்லை. இது தான் அன்பின் சக்தி நீ நினைப்பதை என்னால் கூறமுடியாத விடயத்தில் நம் இதயங்கள் ஒன்றுசேர்ந்திருக்க முடியாதல்லவா? உருவத்தால் இருவரானாலும் உள்ளத்தால் நாமிருவரும் ஒன்று' என்று கூறிவிட்டு, அவள் கழுத்தில் அந்தச் சங்கிலியைக் கட்டிவிட்டான்.

'ரகு! நான் பாக்கியசாலிதான்.' என்று அவன் மீது [illegible]

[illegible] டாம். நாம் சினிமாவுக்குப் போகலாம்' என்று கூறிக் கதிரையில் அமர்ந்தான்.

அந்தவாரம் எப்படி நகர்ந்தது என்பதே பானுவுக்கு நினைவில்லை. அவள் எண்ணம் முழுவதும் ரகுவிடமே தஞ்சமடைந்து விட்டது; அவனுடைய உணர்வுகளோடு அவள் ஒன்றிப்போய் விட்டாள்.

பாரதியின் கணவன் மகேசன் இங்கிலாந்திலிருந்து திரும்பிய ஒரு கிழமைக்குள் திருமணமும் வெகு விமரிசையாக நடந்தேறியது. அவர்கள் திருமணத்துக்கு அதிகம் நண்பர்களை அழைக்கவில்லையாயினும், உறவினர்கள் பலர் வந்திருந்தனர். அந்தச் சந்தடியில் ரகுராமனுக்கு வேலையும் ஓய்வின்றியிருந்து கொண்டிருந்தது. பானுவோடு தனித்திருப்பதற்கு அவனுக்கு நேரமே கிடைக்கவில்லை. திருமணம் முடிந்து நான்கு நாளான போதும் சந்தடி குறையவில்லை.

அன்று மாலையில் பாரதியின் கணவன் மகேசனோடு வெளிநாட்டு விடயங்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தான் ரகுராமன் அதே வேளையில் தம்பி சிவராமன் ஓடிவந்து, 'யாரோ உங்களை போனில் அழைக்கின்றார்கள் என்றான் யாராயிருக்கலாம் என்று சிந்தித்த வண்ணமே தொலைபேசியிருக்குமிடத்துக்குச் சென்றான் ரகுராமன்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்ற பானு அவனுக்குப் பின்னே சென்றாள். மகேசன் வந்த நாள் முதலாய் இதுவரைக்கும் பானுவால் ரகுவுடன் நெருங்கிப் பழக முடியாது போய்விட்டது. அவனோடு மகிழ்ச்சியாகக் கழிந்த ஒவ்வொரு நிமிடத்தையும் நினைவு கூர்ந்தே அவள் இன்பமடைந்தாள். அவன் கூட்டத்தை விட்டுத் தனித்துச் செல்வதைப் பார்த்தே அங்கு வந்தாள்: ஆனால் அவன் தொலைபேசியில் யாருடனோ உற்சாகமாக உரையாடுவது கேட்டது:

'ஏன் ரோஸி! எட்டின் ஏதாவது கூறினாளா?'

'......' வெளியே எதுவும் கேட்கவில்லை.

'நீ வராவிட்டால் என்ன? பரவாயில்லை ரோஸி அப்துல்லா ஒரு இடமும் போக அனுமதிப்பதில்லையென்று எட்லினே கூறினாள்' என்றான்.

'......'

'அப்படி ஒன்றுமில்லையா? நல்லது;'

'......'

'என் கல்யாணமா' நடக்கும் போது நீயில்லாமலா? எட்லின் உன் ஆள்தானே ரோஸி?'

'......'

'உண்மையாகத் தான். நான் எட்லினை விரும்புகின்றேன். அவளைத் திருமணம் செய்வதால் வீட்டை விட்டே வெளியேற நேர்ந்தாலும் பரவாயில்லை'

'......'

'உண்மைதான் எட்லினே அதிசயப்படுவாள்.'

'......'

'சரி ரோஸி போனை வைக்கிறேன்' என்று கூறிப் போனை வைத்து விட்டுத் திரும்பியபோது அவன் மனதில் உற்சாகம் கரை புரண்டோடியது அவன் முகத்தில் எதையோ வென்றுவிட்ட பெருமிதம் காணப்பட்டது. ஆனால் அவனுக்குப் பின்னால் நின்று அவன் கூறிய விடயங்களனைத்தையும் பானு கேட்டுக் கொண்டு நின்றதைப் பற்றித் தெரியாதவனாக, மனதில் பல வேறு கற்பனைகளுடன் சென்றான் ரகு.

நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் ஒன்றைச் செய்து விடுவதாக மனித இனம் கடவுளின் மேல் போடும் ஒரு பழி இப்படிப்பட்ட சம்பவங்களினால்தான் தோற்றுவிக்கப்படுகின்றது போலும் பிறரை ஏமாற்ற நாம் எடுக்கும் முயற்சிகள் கடைசியில் எம்மையே காலைவாரி விட்டு விடுகின்றது. கஷ்டம் நேரிடும் போதுதானே மனிதன் கடவுளை நினைக்கின்றான். அன்று இரவு பூராவும் பானு அவன் கண்ணில் தென்படவேயில்லை.

மறுநாட் காலை கம்பெனிக்குப் புறப்படுவதற்கு முன்னர் அவனுக்கு அப்துல்லாவிடமிருந்து அழைப்பு வந்தது. அந்த அழைப்பை ஏற்று அப்துல்லாவின் பங்களாவுக்குச் சென்றான். அப்துல்லாவின் பங்களாவில் ரோஸியே அவனை வரவேற்று அழைத்துச் சென்றாள்.

'குட் மோனிங் மிஸ்டர் ரகுராமன்.' அப்துல்லாவின் கனத்த குரல் ஒலித்தது.

'குட் மோனிங் பொஸ்.'

'ரேக் யுவர் சீற்'

'தாங்கியூ,' என்று கூறியவாறு உட்கார்ந்து கொண்டான் ரகுராமன்.

'மிஸ்டர் ரகு! உங்களை நம்பி ஒரு பெரும் பொறுப்பை ஒப்படைக்கப் போகிறேன். ஆனால் இந்த வேலைகளுக்கெல்லாம் மனேஜரே நேரில் செல்வது வழக்கம். அவருக்கு உடல் நலம் இல்லாத காரணத்தால் தங்களை அனுப்ப முடிவு செய்தேன்" என்று கூறிவிட்டு அவனையே நோக்கிய அப்துல்லா அவன் மனக் கருத்தை அறிய முயல்பவர் போன்று மௌனமாயிருந்தார்.

'என்ன மிஸ்டர் ரகு! எதுவும் பதில் கூருமலிருக்கின்றீர்கள்?' என்றாள் ரோஸி.

'நீங்களிடும் பணியைச் செய்வது எனது கடமை. மறுப்புக்கூற முடியாத நிலை எனது நிலை' என்று கூறிச் சிரித்தான் ரகுராமன்.

'யூ ஆர் கரெக்ட் மிஸ்டர் ரகு; இப்படிப்பட்ட வேலைகளுக்கு மனத் தயக்கம் உள்ளவர்கள் உதவார்கள். மிகப் பெரிய பொறுப்பு என்றதும் சிலர் பயந்து விடுகின்றனர்.' என்று அப்துல்லா கூறிவிட்டு இரு நிழற் படங்களை அவனிடம் நீட்டினார். அவைகளை எடுத்துப்பார்த்துவிட்டு திருப்பிக் கொடுத்தான்.

'இவர்கள் பிரான்சுக்காரர்கள் எமது நிறுவனத்துடன் தொடர்புடையவர்கள். இவர்களை நீங்கள் 'சைனீஸ் ஹோட்டலில்' ...காமும்பில் சந்திக்க வேண்டும். நாங்கள் தரும் பொருட்களை அவர்களிடம் கொடுத்துவிட்டு, அவர்கள் தருவதைப் பெற்றுக்கொண்டு வரவேண்டும். அவர்கள் தரும் பொருட்கள்கிட்டத்தட்ட ஐம்பதுலட்சம் பெறுமதியானவையாகும்.'

(9ம் பக்கம் பார்க்க)

## படிதாண்டாப் பத்தினி

கடைத்தெரு பூங்கா கடற்கரை திடல்கள்
நடைத்தெரு ஓரம் நடன மண்டபங்கள்
களியாட்ட மணி மாளிகை காரிருள்
விளையாட்டறைகள் விருந்து மேசைகள்
சூதுக் கொட்டகை நாடக அரங்குகள்
போதைக் கழகப் பொன்விலக் கறைகள்
கூச்சல் மகளிர் மன்றக் கூடம்
நீச்சல் தடாகம் நேச மன்றுகள்
அழகுத் திரைப்பட மண்டபம் நாய்கள்
பழக வளர்ப்போர் கழகப் பணிஅறை
இரவு விடுதிகள் இனிய ஊர்திகள்
பெரிய மனிதர்தம் பேரெழில் மாடிகள்
இவ்வகை எங்கணும் எழிலுடல் சுமந்தே
ஓர் நாள்• ஓரிடமாகி ஓர் தமிழ்ப்பெண்
ஊர் உலாத் திரிகிறாள்...உற்ற கணவன்
குடியிருக்கும் தன் சொந்த வீட்டுப்
படியைத் தாண்டி உள்ளே பாவை
போனநாள் மட்டும் புலவன் அறிகிலேன்...
படிதாண்டாப் பத்தினியாள் வாழ்கவே!

அத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து முஸ்லீம்காள்!

—சம்மாந்துறை அஸீஸ்—

அன்பினிலே கடைந்தெடுத்த,
அழகுதமிழ் மொழியதனை,
இன்பத்தில் இருகணைத்து
இலக்கியங்கள் பலசமைத்து,
உண்டுதினம் உரம்பெற்று
உரிமையுடன் பேசுகின்ற...

ஈழத்து முஸ்லீம்காள்
இன்றென்ன எங்கள்நிலை,
பாழ்பட்டுத் தவிக்குதடா
பழந்தமிழோ எம்நாட்டில்,
ஆளத்தான் அமர்கின்ற
ஆட்சிகளின் பிடியினிலே!

நெஞ்சினிலே திடங்கொண்டு
நிமிர்ந்திங்கே தமிழ்மொழிக்காய்,
அஞ்சாமல் உரிமைபெற
''அல்லாஹ்''வின் துணைகொண்டு
செங்குருதி சிந்தியெனும்
சீர்மையினைப் பெறுவோம்வா!

# மொழிக்குமட்டுமல்ல மதத்துக்கும் ஆபத்து!

கல்வி அமைச்சர் (ரமழான்) நோன்பு மாதத்தில் முஸ்லிம் பாடசாலைகள் வைக்கப்பட வேண்டுமெனக் கொணர்ந்துள்ள தீர்மானத்திற்கு நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதம்தான் காரணம் என்று கல்வியமைச்சர் கூறும் காரணம் வெறும் பொய்யே.

இதை நிரூபிக்கத் தக்க ஆதாரம் இருக்கிறது. கல்வியமைச்சர் இன்று ஒன்று சொல்லலாம்; நாளை அவருக்கு அது மறந்து போகலாம். ஆனால் இப்போது பொதுமக்களுக்கு நினைவாற்றல் கூடிவருகிறது. இதைக் கல்வி அமைச்சர் மறக்கக் கூடாது.

1970ம் ஆண்டு (ரமழான்) நோன்பு மாதத்தில் முஸ்லிம் ஆசிரிய கலாசாலைகளை மூடும்படி கோரி ஓர் ஆசிரிய கலாசாலையிலிருந்து தூதுகோஷ்டி ஒன்று சென்று கல்வி அமைச்சரைப் பேட்டி கண்டது. இது கல்வி அமைச்சருக்கு ஞாபகமிருக்கலாம்.

அப்போது கல்வி அமைச்சர் சொன்ன பதில் இது தான்:— ''முஸ்லிம்கள் எதிலும் சுகத்தைத்தான் விரும்புகிருர்கள்; இதனால்தான் சமூதாயம் பின்னடைந்து வருகிறது: நான் கூட நோன்பு நோற்றுக்கொண்டு அலிகார் பல்கலைக்கழகத்தில் படித்தேன். இனிமேல் முஸ்லிம் பாடசாலைகளையும் (ரமழான்) நோன்பு மாதத்தில் திறக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறேன். ஆதலால், ஆசிரிய கலாசாலைகளுக்கு நோன்பு காலத்தில் விடுமுறை அளிக்க முடியாது.'' என்று மறுத்துவிட்டார்.

இப்படியாக 1970ம் ஆண்டிலேயே சொன்ன கல்வியமைச்சர், இன்று போலிக் காரணம் கூறி பொது மக்களை ஏமாற்றப் பார்க்கிருர். அவருக்கு தைரியமிருந்தால், இதற்குப் பதில் தரட்டும்.

'இன்று இலையறுத்தவன் நாளைக்கு குலையறுப்பான்' இதில் என்ன சந்தேகம்?

ஆதலால், முஸ்லிம் பெற்றோர்களே! பிள்ளைகளே! ஆசிரியர்களே! எச்சரிக்கையாக இருங்கள்! எமது சமூகத்தைக் காட்டிக்கொடுப்போர் தமிழரசார் என்று வீண்பழி சுமத்தும் இவர்கள் செய்யும் சேவை இதுதானு.

ஒரு முஸ்லிம் கல்வியமைச்சர் செய்யப்போகும் இந்த தான்தோன்றித்தனமான நடவடிக்கையை இன்று ஒரு சிங்களவரோ, தமிழரோ செய்ய நினைத்திருந்தால் முஸ்லிம்கள் கொதித்தெழுந்திருப்பார்கள்.

கல்வி அமைச்சரின் திட்டத்திற்கு 'ஆமா' போட்ட முஸ்லிம் தலைவர்களில் எத்தனைப்பேர் நோன்பு நோற்கிருர்கள் எனக்கேட்டால் அவர்களின் நிலையை வெளியே சொல்லவே வெட்கம்!

முஸ்லிம் சமுதாயத்தின் வேலியே பயிரை மேய்கிறது. ஆண்டவனே நீயே கேள்!

—'எக்ஸ்ரே'

''இன்று மட்டும். இனிமேல் இல்லை'' என்று ஒரு கணவன், மறுக்கும் தன் மனைவியிடம் இருட்டறையில் இரவு முழுவதும் கெஞ்சிக்கேட்டு, தன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள முயன்ருராம்.

''நிலவுக்கும் ஒரு நாள் ஓய்வுண்டு. எனக்கும் மாதத்தில் உள்ள கொஞ்ச ஓய்விலும் என்னை விட மாட்டீர்கள் போல் இருக்கிறீர்களே!'' என்று மனைவி கூறினாளாம்.

இதே போன்று தான், ''இந்த வருடம் மாத்திரம். இனிமேல் இல்லை.'' என்று சொல்லி, புனிதநோன்பைக் கெடுத்தாவது தமது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளப்பார்க்கிருர் கல்வியமைச்சர்.

தற்போதைய மௌனம் விருப்பத்திற்கு அறிகுறி என அமைச்சர் தப்பாக நினைத்து, புனித நோன்பைத்தொட்டால், முயற்சி தோல்வியிலே முடியும்.

எண்ணற்ற ஆசிரியர்களும் மாணவர்களும் நோன்பு காலத்தில் விடுமுறைபெற்று வீடுகளில் தங்குவதற்குத் திட்டம்போட்டுள்ளனர்.

ஆகவே—

கல்வி அமைச்சரின் ஆசை நிராசையாகும் என்பது இப்போதே நிரூபணமாகி வருகிறது.

—எஸ். எச். எம். யாஸீன்.
18, மெயின் வீதி.
மட்டக்களப்பு.

## பண்டாரநாய...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலேயே எண்ணின. ஆனால் தமிழுக்கு எதிராகச் சிங்களம் என்ற வகையில் நாம் எண்ணத் தலைப்படவில்லை. இது தவருக இருக்கலாம்.'

(ஷி—நிரல் 681)

பண்டாரநாயகா தமிழுக்கு எதிராகச் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வரவில்லை. ஆங்கிலத்துக்கு எதிராகவே சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தாரென நிலைநாட்ட முயல்வோர் 1955ம் ஆண்டிலேயே தமிழுக்கெதிராகவே தமது திருத்தத்தை முன்மொழிந்தாரென்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

(அடுத்த இதழில் முடியும்)

# இஸ்லாமிய தமிழர் இயக்கம்

அன்புமிக்க இஸ்லாமிய இளைஞர்களே;

ஓர் இஸ்லாமியனுக்கு மதம் மட்டும் முக்கியமானதல்ல; அவன் பேசும் தாய்மொழியும் உயிருக்குயிரானதுதான் என்பதை நிலைநிறுத்தி இஸ்லாமிய சமூதாயத்தில் ஒரு புதிய சிந்தனையை தூண்டிவிட்டிருக்கிருர்கள் வங்க மொழிக்கும் வங்க இனத்துக்கும் விடுதலைகோரிப் போராடிவரும் வங்கத்து இஸ்லாமியர்கள்.

இஸ்லாமிய மத ஒற்றுமை என்கின்ற போர்வையில் தங்கள் மொழியும், இனமும் அழித்தொழிக்கப்படுவதை எதிர்த்து வீரப்போர் புரிந்து வரும் வங்கத்து இஸ்லாமியர்களைக் கண்டு விடுதலையுள்ளங்கள்எல்லாம்தலைதாழ்த்தி வாழ்த்துகின்றன.

ஆனால் ஈழத்திலோ தமிழைப் பேசி தமிழையே தாய்மொழியாகக்கொண்டு தமிழ்மொழியை வளர்த்துவரும் இஸ்லாமியத் தமிழர்களிடையே 'தமிழ்மொழி எமக்குவேண்டாம்; சிங்களமே எமக்கு வேண்டும்; என்று கூறி இஸ்லாமியத் தமிழர்களைக் காட்டிக் கொடுத்து வரும் நச்சுப் பாம்புகள் சிலவும் இருக்கத்தான் செய்கின்றன. அதே நேரத்தில், தமிழ் எங்கள் உயிர்; தமிழுக்காக உயிரையும் தருவோம்; என்று சிந்து பாடும் இஸ்லாமிய இளைஞர்கள் பலர் இருப்பதையும் நாம் அறிவோம்.

அத்தகைய தாய்மொழித் துடிப்புமிக்க— தமிழுணர்ச்சிமிக்க— மதத்தைவிட மொழியே முக்கியம் என்று கருதுகின்ற — நாம் இனத்தால் தமிழர்; மதத்தால் இஸ்லாமியர் என்று நெஞ்சு நிமிர்த்தி கூறுகின்ற இஸ்லாமியக் காளையரை இணைக்கும் இயக்கமாகத்தான் 'இஸ்லாமிய தமிழர் இயக்கம் சுதந்திரனில் ஆரம்பமாகின்றது.

துடிப்புமிக்க இஸ்லாமிய தமிழர்கள் எழுதும் மொழி, இன விடுதலையுணர்வைத் தூண்டும் எழுத்தோவியங்கள் இப்பகுதியில் இடம் பெறும். இஸ்லாமியத் தமிழர்களே! எடுங்கள் பேனு! ஓட ஓட விரட்டுங்கள் உங்கள் மத்தியிலுள்ள தமிழ்த் துரோகிகளை!

—ஆசிரியர்

# உங்களுக்கு இலங்கை குடியுரிமை மறுக்கப்பட்டிருக்கிறதா?

இலங்கைப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்து அவ்விண்ணப்பங்கள், விசாரணைகள் எதுவித காரணங்கள் இன்றி நிராகரிக்கப்பட்டிருந்தால்—பெயர் விபரங்களைத் தெரியப்படுத்துமாறு இலங்கைத் தொழிலாளர் கழக வவுனியாப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. த. ம. பீற்றர் பொன்கலன்ட் அவர்கள் வேண்டியுள்ளார்.

எனவே, கிளிநொச்சி, மன்னர், வவுனியா ஆகிய தொகுதிகளில் இருந்து விண்ணப்பித்து —நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், அப்பகுதியிலுள்ள தமிழரசுக் கட்சிக் கிளைகள் மூலமோ— அன்றேல் நேரிடையாகவோ த. ம. பீற்றர் பொன்கலன்ட், (இ. தொ. க. வவுனியாப் பிரிவு பொறுப்பாளர்) நெடுங்கேணி என்ற மூகவரிக்குத்தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்'

## தீக்குள் விரலை...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

'நான் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும். அப்படித்தானே?' என்ருன் ரகு.

'கரெக்ட் மிஸ்டர் ரகு: இந்த விடயத்தில் நீங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஏற்கெனவே இப்படி ஒரு முயற்சியில் எமக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது. அந்த ஒரு ஹோட்டல்தான் மிகவும் பாதுகாப்பானது. அந்த ஹோட்டலிலும் சில சமயம் பொலீஸ் வேட்டை நடைபெறுவதுண்டு. அப்படி ஏதும் நடைபெற்றால் நீங்கள் எப்படியாவது தப்பித்துக் கொண்டுவிட வேண்டும். நாம் கொடுக்கும் சிறு பார்சலை உங்கள் கோட் பாக்கெட்டிலேயே வைத்துக் கொள்ள வேண்டும். மிகுதியை ரோஸியே கூறி அனுப்புவாள்' என்று அப்துல்லா கூறிக் கொண்டிருக்கையில், அந்த அறையில் கதவு நிலைக்கு மேலே பொருத்தப்பட்டிருந்த சிவப்பு விளக்கு எரிய ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து, 'சார், பொலிஸ் எங்கள் கம்பெனி உதவி மனேஜரிடம் விசாரணை நடத்திக் கொண்டிருக்கின்றது.' என்று ஒரு பெண் குரல் கூறியது. அந்தக் குரல் அப்துல்லாவின் மேசைமீது இருக்கும் நவீன ஒலிபெருக்கியிலிருந்து கேட்கின்றது என்பதை உணர்ந்து கொண்டான் ரகுராமன்.

'மிஸ்டர் ரகு! நீங்கள் போகலாம்: இரவு ரோஸி உங்களைச் சந்திப்பாள்' என்று கூறிவிட்டு எழுந்த அப்துல்லாவின் முகத்தில் பீதி படர்ந்திருப்பதை உணர்ந்தான் ரகுராமன்.

(வரும்)

## உன்னைவிட்டுப் போகின்றேன்... உன் நினைவோ போகவில்லை...!

குறிஞ்சி—தென்னவன்

ஆடுகள்போல் மாடுகள்போல் அடிமைநிலை மாருமல்
பாடுபட்டோம், உன்னுடலை பண்படுத்தி வளமிக்க
நாடிதென உலகினிலே நல்லபெயர் வாங்கி வைத்தும்
வாடும்நிலை மாறவில்லை வாட்டமது தீரவில்லை;

உன்னைவிட்டுப் போகின்றேன்...
உன்நினைவோ போகவில்லை...!

என்னருமைத் தாயகமே! எழில் தவழும் மலையகமே!
உன்னருமைப் பிள்ளைகளாய் உலவிவந்தோம் உன்மடியில்
சின்னப் பிழையும் செய்தறியா எங்களையே
ஒண்ணுமில்லாதவராய் ஓட்டாண்டி யாக்கிவிட்டாய்

உன்னைவிட்டுப் போகின்றேன்...
உன்நினைவோ போகவில்லை...!
பெற்றவளோ பிள்ளைகளில் பெரிதென்றும் சிறிதென்றும்
சற்றேனும் பேதம் தான்காட்டாள், உன்மனதின்
பற்றெல்லாம் மூத்தவர்பால் பற்றிவிட எம்மீது
பற்றின்றி பொல்லா பகைவரென எண்ணிவிட்டாய்:

உன்னைவிட்டுப் போகின்றேன்...
உன்நினைவோ போகவில்லை...!

நூருண்டு விழாவெடுத்து நெஞ்சம் மகிழ்ந்துவிட்டாய்
நீராக குருதியினை நிதம் வடித்து தேயிலைதான்
சீராக வளர்ந்து செழிப்புறவே மூல
வேரான எம்மினத்தை விழி திருப்பிப் பார்த்தவரார்?

உன்னைவிட்டுப் போகின்றேன்...
உன்நினைவோ போகவில்லை...!

எங்களினம் சென்ற இடமெல்லாம் இப்படித்தான்
தங்குதற்கு இடமின்றி தத்தளிக்கின் ருரினியும்
எங்களினஞ் சந்ததிக்கு இந்தநிலை வாராமல்
தங்கநிலையான இடம் தான்வேண்டும் என்பதனல்

உன்னைவிட்டுப் போகின்றேன்...
உன்நினைவோ போகவில்லை...!

''வாழவைப்போம் உம்மை'' என்று வந்தவர்கள் எம்மினத்தை
ஆழப் புதைத்துவிட்டார் அடிமைத்துயர் சேற்றில்
பாலை நிலமெனவே பசுமையற்ற வாழ்வினில்ப
சோலைமலர் பூக்கவில்லை சுகத்தென்றல் வீசவில்லை.
உன்னைவிட்டுப் போகின்றேன்...
உன்நினைவோ போகவில்லை...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# 7வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் — பிளாசா — வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்நகர்)


நடிகர்திலகம்
சிவாஜிகணேசன்

ஜெயலலிதா

நாகேஷ், சுந்தரராஜன்,

நம்பியார், பண்டரிபாய்

—நடித்த—



# தெய்வ மகன்


டைரக்ஷன் A. C. திருலோகசந்தர்

# 3வது வாரம் அமோகமாக

வெற்றியுடன் காட்சியளிக்கின்றது

கிங்ஸ்லி — சபயர் — லிடோ
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ் நகர்)

ஜெமினிகணேசன்
வாணிஸ்ரீ
முத்துராமன் நாகேஷ்
சுந்தரராஜன் சயிலஸ்ரீ
எம். ஆர். ஆர். வாசு
டி. கே. பகவதி
—நடித்த—



கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்


# தபால்காரன் தங்கை

---

## இப்பொழுது-சிலோன் என்டர்டெயின்மன்ட் திரைகளில் காட்சியளிக்கிறது

# சென்ட்ரல்

(மருதானை)



ஜெமினிகணேசன்
ஜெய்சங்கர் லட்சுமி
நாகேஷ் விஜயலலிதா
ஸ்ரீகாந்த் மனோரமா
—நடித்த—

# நூற்றுக்கு நூறு

---

## 5வது ஜனத்திரள் நிறைந்த வாரமாக காட்சியளிக்கின்றது

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை) — **வின்சர்** (யாழ்நகர்) — **இம்பீரியல்** (மட்டு நகர்)

ஜெமினிகணேஷன், (இரு வேடங்களில்) கே. ஆர். விஜயா

பி. எஸ். வீரப்பா, நாகேஷ், நிர்மலா, - மற்றும் பலர் நடித்த -

கதை-திரைக்கதை-டைரக்ஷன்
தாதா மிராசி

# சங்கமம்

(ஈஸ்ட்மன் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா விதி, 194 ஏ. இலக்கத்தில் 1971-ம் வருடம் ஐப்பசி மாதம் 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்